
# சித்திரை
# கனிமலர்





பூஜ்யஸ்ரீ சத்குரு தாளி பாபா



# கிருஷ்ணா
# கணிமயர்

## பொருளடக்கம்


1. சித்திரை கனிமலர்------------------------------------------1
2. தத்துவஞானம், வாசனாக்ஷயம், மனோநாசம் --------------------72
3. அஞ்ஞான வைராக்கியம்--------------------------------------81
4. ஞான வைராக்கியம்------------------------------------------82
5. ஸத்குரு சேவை---------------------------------------------90
6. நாம ரூப குணம் குறி என்றால் என்ன?------------------------92
7. புனிதமான பிறவி-------------------------------------------93
8. கேள்வி பதில்----------------------------------------------94
9. நனவு & கனவு----------------------------------------------97
10. யாம் [நாம்] யார்?----------------------------------------100
11. பதி பந்தம்-----------------------------------------------113


எல்லாம் நீ!



ௐ

(ஸத்திய வாக்கு)

ஸத்தியம் பேசு.

தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலை பெறும்"!

"ஸ்ரீ ஸத்குரு திருவடிகளே"!

"நம்பினோர் கெடுவதில்லை"!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்",

"ௐ"

"அகம்பிரம்மம், ஜெகம்பிரம்மம்",

"அகமே எல்லாம்"!

"ஜெகம் பரமும், ஜீவர்களும்",

"சிறிதும் இல்லை"!

"தெய்வம் மனுஷ்யானாம்"! "யத் பாவம் தத் பவதி"!



உ

ஓம் ஆத்மானந்த குழந்தைகளே! "உள் ஒளி" பொருந்திய, "மாணிக்கங்களாக" "108" மட்டும் தருகிறோம்! இதை அனுபவித்து, "அதுவே நாம்"! "நாமே அது"! என, ஆகுக என, ஆசிவழங்குகிறோம்!

1. கீழே தரும் மாணிக்கங்களின்; "உள் ஒளியே"! "அகம் பிரம்மம்", "பிரம்மம் அகம்", "அகமே எல்லாம்"!!! என்ற "அதுவே நாம்", "நாமே அது", "எல்லாம் நாமே"!!! (எல்லாமே நலமே) என்ற, மஹா வாக்கியம் ஆகும்.

ஜீவன் முக்திக்காக, எங்கும் பக்குவ ஆன்மாக்களுக்காக, காலாதீதமான, அந்த "ஒன்றே" ஓர் காலத்தை ஏற்படுத்திக் கொண்டு, இறை சொரூபமாக, இறங்கிவந்து, "பரகருணையின்"! நிலையில், தாமே "ஸ்ரீபகவான்" என ஆனது என, ஸ்ரீமஹான்கள், சொல்லுவார்கள்!



# உ

௨. தன்னை அறியும் "மெய் அறிவே" "ஆன்மா"! "ஆன்மாவே மெய் அறிவு"!

3. மறைமய கற்பனையின் அனைத்து "நாமரூப" தோற்றம் அனைத்தும், "ஆன்மாவுக்கு" அன்னியமாய், இல்லவே இல்லையென்றறிவதே, மெய் அறிவாகும்.

4. நாமரூப ஜகம், அனைத்தும், "ஆன்ம" சொரூபமாக, இருப்பதால், "ஜகத்" கர்த்தாக்கள், "மூவரும் கூட" நாமரூபத்தோடு இல்லை யென்றும். அவர்கள், "ஆன்ம" சொரூபமாகவே, இருக்கிறார்கள் என்றும் உணரவேண்டும்.

5. "ஆதி அந்தம்"! "தோற்றம் இருப்பு"! "சொந்தம் பந்தம்"! "மோக்ஷம்" என்ற ஜீவன் முக்தி. இவை அனைத்தும், "லோகங்களின்" மாயா ஜாலமே! உண்மையில், இவை ஒன்றும் இல்லவே இல்லை! இருப்பது, "நம் ஆன்மாவே"! நாம் நாமாகவே, இருக்கிறோம் என, சலியாமல் இருப்பாயாக.



"வியாபாரம்" எதிர்பார்ப்பு "விளம்பரம்! ஆடம்பரம்"! இல்லாமல் செய்வதே, "தர்மம்". இந்தர்மத்தினால்தான், "ஜீவன் முக்தி" பெற முடியும்!

7. உலகமே வியவகார ஸத்தியம்! உண்மையில், இல்லவே இல்லை! ஆகவே, "காண்பதையும்", "கேட்பதையும்", அது பற்றி "பேசுவதையும்" குறைத்துக் குறைத்து, நிறுத்தப் பழகிவிட்டால், "உலகம்" தோற்றுது. அங்கு "ஆன்மாவை" உணர முடியும்!

8. "வாக்கிய விளக்கமே" நாமரூப ஜகமும், அதன் பொருள்களும் ஆகும். முன்பாடலில் சொன்னபடி, "மூன்றையும்" குறைத்து நிறுத்திவிட்டால், "நித்திய வஸ்துமட்டும்"! நாமரூப பொருளும், தோற்றுது. கவக்கமான "நைவதயமும்" அவஸ்யம் தோற்றுது!

உ



9. "மனதின் கற்பனையிசைவில்" தோன்றும், அனைத்தும், கலக்க துக்க பயம் ஆகும்.

10. "மனதின் கற்பனையை" ஒழித்து விட்டால், அனைத்து கலக்கதுக்க பயம், அனைத்தும் ஒழிந்து விடும்! நாம் நாமாக, "ஆன்மாவாக" இருப்போம்!

11. "புத்தி" (மன) சொரூபமாக இருந்தால், "காணும்" காட்சிப் பொருள் ஆவாய்.
"அறிவு" (ஆன்ம) சொரூபமாக இருந்தால், "காண்பவன்" என ஆவாய். ஆகவே, அறிவு சொரூபமே, "ஆன்மநிஷ்டை" ஆகும்.

12. மாயாமனம் தோன்றிய இடம், மாயா சொரூபமான, ஸ்ரீ பகவானிடமாகும். ஆகவே இந்த மாயா மனதை, ஸ்ரீபகவானிடம் விடாமல், வேறு எந்த "சாதனை" செய்தாலும், மனதை, இல்லாமல் பண்ண முடியாது. ஆகவே, ஸ்ரீ பகவான் கருணை, அவஸ்யம் வேண்டும்! அந்த ஸ்ரீ பகவான் கருணை பெறும் வழி :— "எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே! என்று, சர்வார்ப்பணம் ஆகும்.



13. உ

"ஆன்மாவே ஸித்" ஆகும்! ஸித் சொரூபமே, "சித்தம்" ஆகும்! சித்தத்தின் எண்ணமே, ஜகத்ஜீவ சொரூபங்கள் ஆகும்! அனைத்தும் ஸித்தாகிய, "ஆன்மாவே" என, பாவனை செய்தால், ஜகம் தோற்றது ஒழியும். அங்கு, ஆன்மா பிரகாசிக்கும்.

14. நடப்பன, ஊர்வன, பறப்பன, நீந்துவன, அனைத்தையும் "ஸ்ரீபகவான்" சொரூபம் என்றும், ஸ்ரீபகவான் இயக்கம் எனவும், நாமும், ஸ்ரீபகவானே என "உணர்ந்தால்!" ஸ்ரீபகவான். "தர்ஸனம்" பெறலாம்!

15. "மித்தை" (பொய்) யான பொருளோ, மித்தையான உலகமோ, "பாமரன்" என்ற "ஜீவனே" "பண்டிதனே". மற்றும், அனைத்து "பேதாபேதமோ"! இல்லவே இல்லை! அனைத்தும், "ஆன்ம" சொரூபமே!

16. சொல்லும் "யாமும்"! கேட்கும் "நீயும்"! மற்றும் "காணும்" அனைத்தும்! நம் "ஆன்ம சொரூபமே! இந்த திடமான, உறுதியால், "மனதை" வெல்வாயாக.



17. "ஈசு" நாட்ட இடம்இல்லாமல், நம் "ஆன்ம" சொரூபமாகிய, "பரமே" நிறைந்திருக்கிறது என்ற "பரஉணர்விலே", சலனம் அடைகின்ற, மனதை வென்று, "சொல்அற சும்மா" இருப்பாயாக.

18. "வாய்ஞானம்" வேண்டாம்! அதுவே நாம் என்ற "உறுதியான, திட அநுபவஞானம்" வேண்டும்!

19. "நாமரூப" ஜகமும் இல்லை! அதை, எனது என்ற, அபிமானமும் அஹங்காரமும் இல்லை! எங்கும் "அந்த ஒன்றே" நிறைந்திருக்கிறது என்ற உடல் உலக "உணர்வற்ற" நிலையில், "ஹரி" துயில் கொள்வாயாக!

20. "யத்பாவம் தத்பவதி" என்ற நிலையில், மேன்மைய, "நாமரூப" ஜகத்தை மறந்து; அது "மறந்து" மனது "இறந்து" "ஆத்மாவே நாம்" என்ற, பிரம்மாண்ம பாவனையால், "மாயா மனதை" வெல்வாயாக!



௨௧. உ

மனோமய "நாமரூப" ஜகத்தை, மறந்து "நானும்" அனைத்தும்; "ஆன்ம" சொரூபமே என்றும்; இடையறாது சிந்தித்து சாந்தரூபாய்!

௨௨. "காணியும்", "நாணியும்", காணும் அனைத்தும், "எனக்கு" அன்னியமாக, இல்லையென்ற "திடபாவனையால்" சுதாவும், அலையும் "மனதை" நிறுத்தி, அசைவற்று, "ஏகபர" பாவனையில், நிலைப்பாயாக.

௨௩. "அசையும்" மனம்; "அசையாமல்" நிற்கும் வரை, "ஞானதோ ஷபாவனையை" விட்டு விட்டு, எல்லாம் ஒன்றே, அது "ஆன்மாவே"! அது நாமே என்று, பாவனை இடைவிடாமல் செய். அங்கு "ஞான" சூரியன் உதிப்பான். அஞ்ஞான இருள் ஓடிவிடும்!

௨௪. "பூரணபிரம்ம" சொரூபத்தை யன்றி, அன்னியம் எதுவும் இல்லை என்ற திடபாவனை செய்தால், மனோசஞ்சலம் நீங்கும். அகண்டஜோதி தாமே பிரகாசிக்கும். அதுவே, சும்மா இருக்கும் நிலையாகும்.



௨௫. "மனம் சலனம்" அடைந்தால், "நாமரூப" ஜகமாகத் தோற்றும்! "மனம் அசைவற்று" "அதுவே நாம்" என்ற உணர்வோடு இருந்தால், அனைத்தும் "பரமாக" தோற்றும்.

௨௬. தைலதாரை போல், "நாமே ஆன்மா" "ஆன்மாவே நாம்" என, இடைவிடாது, சிந்தித்தால், "பூர்ணஞானம்" நாமே உண்டாகும்! அந்த ஞானமானது, "சுகம்" கொடுக்கும்! "துயரை"த் தீர்க்கும்! சுபத்தி றும் "சுபமாகும்"! அதி "சுபமாகும்"! அதுவே, ஜீவன் முக்தியுமாகும்!

௨௭. "நனவும்"! "கனவும்"! மனை மயகற்பனையே! இவ்விரண்டியும் காணும் பொருள் "நம்மிடமே" உள்ளது! ஆகவே, "யாமே" எல்லாம் என, "சும்மா" இருப்பாயாக!

௨௮. வருத்தமோ. கஷ்டமோ. பய துக்கமோ. இவை அனைத்தும் "மறைமயமானவே"! "அதுவே நாம்" என்பது உறுதியானால் இறை குரு கிருபையினால், திடஞானம் பிரகாசிக்கும்!



உ

29. "தன்னை அறியும் அறிவை" உணர்வதே "கல்வி" ஆகும். இக்கல்வியே, மனமைய "பயபீதியை" அழித்து, பூரண ஞானம் நல்கும்!

30. "கறை" இல்லாத, "மறைப்பு" இல்லாத, "குறைவு" இல்லாத, "ஆன்மாவே" ஸத்தியம். மற்றும், காண்பதுவும், கேட்பதுவும், நினைப்பதுவும், பேசுவதும், அனைத்தும், "பொய்யே!"

31. "நாமரூப" ஆகமாகவும், சரீரங்களாகவும், காணாமலும், கேட்காமலும், அதுபற்றி பேசாமலும், "எல்லாம் ஒன்றே!" "அதுநாமே" என அசைவற்றிருப்பாயாக

32. சர்வசதாவும், "அசையும் மனம்" அசைவற்றிருக்க வேண்டுமானால், "யாமே ஆத்மா! ஆத்மாவே நாம்" என்ற, "பாவனையை" திரும்ப திரும்ப பாவனை பண்ணுவாயாக! இந்த "தர்மத்தை" "அசையுற்ற" மனம் "அசைவற்று" நிற்கும்! நீ ஆன்மாவாகவே இருப்பாய்!

உ



33. மேலே சொன்ன "பாபாவினையில்" மனம் நிலைத்து நின்றால் "குற்றம் குறை, பேதம், விருப்பு, வெறுப்பு" இல்லாது ஒழியும்! நீ ஆன்மாவாகவே இருப்பாய்!

34. ஸ்திரீ ஹத்தி! கோ ஹத்தி! பிரம்ம ஹத்தி! சிசு ஹத்தி! குரு ஹத்தி! என்ற "பஞ்சமஹா" பாவங்கள் பண்ணியிருந்தாலும், மேலே சொன்ன, "பாபாவினையால்" ஜீவன் முக்தி பெற முடியும்.

35. "ஹயன்! ஹரி! ஹரன்!" என்ற திரிகர்த்தாக்களும், மற்றும் அனந்த "தேவர்களும்", அனந்த "சிருஷ்டிகளும்", நாம ரூபத்தோடு இல்லை! "அது" வாக இருக்கிறார்கள்.

36. "தமக்கு" அன்னியமாய் எவையுமில்லை. "எல்லாம் ஆன்மாவே" என்ற திட உணர்வு பெற்றவனே, ஆத்மஞானி ஆவான். அவன் திரிலோகத்திலும் ஒருவனே இருக்க முடியும்! இருக்க வேண்டும்! இது அனுபவ ஞானிகளின், வாக்கு ஆகும்!



37. உ

"திடஞானிக்கு நிஷ்டை" சாதனம் தேவையில்லை! "அவன் அதுவாகவே" நாமரூபமற்று இருப்பான்!

38. "திடஞானி" ஆவரண "விக்ஷேப" மயக்கமும், கலக்கமும், இல்லாமல், "பாழும் நீங்கும்!" போல், அந்த ஒன்றிலேயே கலந்திருப்பான்!

39. "பழக்க" (வார்த்தையின் மாயா ஜாலம்) "வழக்க" (செய்கையின் கோரகுணங்கள்) ங்களிலே! "துவைதம்" தோற்றத்தான் செய்யும். ஆனால் "இடைவிடாது" பரஞானப் பியாசத்தினால், துவைதம் ஒழியும்! ஜீவன் முக்தியும், பெற முடியும்!

40. "பரபாவனை" உறுதியானால் "மனம் மாண்டு போகும்" அதாவது, மனம் மறக்காலும் மனம் மறந்தாலே அதுவே ஜீவன் முக்தியாகும்! "மனம் மறக்கும் வரை" அதுவே நாம், நாமே அது என்ற "பரபாவனை" இடைவிடாது செய்வாயாக!



**41. "அகண்டபராபாவனா"** செய்வதால், **"ஜீவன்முக்தி"** அடைய, வேறுமார்க்கம் **"ஏதும்"** இல்லவே இல்லை!

**42. "ஆரம்பத்தில்"** ஏகாந்தமாயிரு! எவருடனும் கூடாதே! காஷ்ட மௌனமாயிரு! என்ன ஆகுமோ? ஏது ஆகுமோ? நாம் என்ன ஆவோமோ? என்ற கவலை பயத்தைவிடு! **"கருங்கல்லைப்போல்"** மன அசைவற்றிரு! பின் **"சகஜநிலை"** தானே கூடும்!

**43. "கண்ணால்"** காண்பதும்! **"காதால்"** கேட்கும், அனைத்து பாவனையையும், காணாத **"அந்த ஒன்றுக்கு"** அன்னியமில்லை என்ற **"பர"** பாவனையால், **"மோஹம்"** ஒழியும்! நீயும் ஜீவன் முக்தன் ஆவாய்!

**44. (காம ரஸனையாக) "ஸ்த்ரீ போஹத்தை" "காமமாக"** கற்பனை பண்ணாதே! (காம வெறியாக) **"அந்த ஒன்றே"** நடத்துகிறதென, கவலை பயம் இல்லாமல், நடத்து. வர வர வர வர **"குறைந்து"**! தானே நின்று விடும்! அதன் பின் **"பரஸ்த்ரீ"** (பிறமாதருடன்) தொடர்பு வேண்டாம்!



45. "எண்ணம், சொல், செயல்" இவைகளை கடந்த நேரே இவன் முக்தி ஆகும்! ஆகவே, எண்ணம் இருந்தால், அதுவே "பந்தம்" ஆகும்!

46. "மாயை", "அவித்தை", "பந்தம்", "முக்தி", "சித்தம்", "ஜீவன்", "ஜகம்", "ஈசன்" இவை அனைத்தும், "நாம ரூப மனோமய கற்பனை" ஆகும்! ஆகவே இவை அனைத்தும் "நம் ஆத்மாவுக்கு" அன்னியமாயில்லை!

47. எந்த விறகையும், "நாம் அது" என்ற பிரம்மாண்ம பாவனை செய்தால், விறகு தீர்ந்ததும், அக்கினி சாந்தி ஆவது போல், அனைத்து "எண்ணமும்" அழிந்து, "நாம் அது" ஆகவே இருப்போம்!

48. "லௌகீக" தர்மமும்! "தெய்வீக" தர்மமும்! "பரமஹம்ஸர்" இயல்பாகவே, மறையும் போது, "எந்த தர்மமும்" இல்லாத நாம் அதுவாகவே இருப்போம்!

49. வேத சாஸ்திரம் அனைத்தும் "சித்த சுத்திக்காகவே" தேவ தெய்வ "உபாசனை"யை சொல்லுகிறது. சித்த சுத்தி ஆனபின், "அது நான்" என்ற பிரம்மாண்ம பாவனையில் "நான்" போன்று இருக்க வேண்டும்!



50. உ
"காலம்", "தேசம்", "வர்த்தமானம்" கடந்ததே "நாம்"! அங்கு நாமரூப "காட்சி", "நிகழ்ச்சி" "பவபந்தம்" இல்லவே இல்லை!

51. "நாமரூப" ஜகம், பொருள் "வரவும்" இல்லை "அருக்கவும்" இல்லை! "மாறவும் மறையவும்" இல்லை! அனைத்தும் "மனோ" மயமான "பாஸமே"!

52. அனைத்து நாமரூப பொருள்களும் "பர" சொரூப அம்சமாகிய "மனமே" ஆகும்! "பரத்தின்" மாயா ஜாலத்திறல் "பேசிப் பேசியே" ஜகத்திற்கு, உயிர் கொடுக்கிறோம். வார்த்தையின் "பேச்சு" இல்லையானால், உலகம் இல்லவே இல்லை!

53. "நாமரூப ஜகம்" இந்த "மாயா மனதிற்கு. பிராந்தி மயக்கம்" ஆகும்! இப்பிராந்தி மயக்கமானது, "பர" பாவனை என்னும், ஔடத தந்திரத்தால் தான் நீங்கும்!

54. "நாமரூப ஜக" பதார்த்தமும் இல்லை! "தேவ தெய்வ" பத அர்த்தமாகிய பதமுக்தியும் இல்லவே இல்லை! "ஸ்வதந்திரமான" பரமுக்தியாகிய, ஜீவன் முக்தியே ஸத்தியம்!



55. உ

"அத்தை" இல்லையென சொல்லவும் "கூடாது"! "அத்தை" உண்டு என சொல்லவோ, விளக்கவோ "முடியாது"! எக்கற்பனையும், இல்லாமல், "சொல் அற சும்மா" இருப்பதே அதுவாகும், நிலையாகும்! எந்த நிலையிலும் "பரம்" "ஆத்ம" சொரூபமே.

56. "ஸம்ஸாரி" அல்ல, என்ற உணர்வுடன் சமுத்திரத்தில், "உப்புப்பதுமையென" கரைந்து விடுவதே, "அகண்டபாவனை" ஆகும்! அதுவே அகண்டாகார விருத்தி ஆகும்!

57. "மனம்" படைத்த "மனித" தாவரங்கள் அனைத்திலும், "ஜீவகலையை" உணர்வது "ஸ்தா விருத்தி" ஆகும்! "84 லக்ஷம்" ஜீவ கோடிகளிலும், "பரமாத்மாவை" உணர்வது, "அகண்ட விருத்தி" ஆகும். தன்னை ஓர் "அல்ப ஜீவனாக" காண்டு, சோகம் மோஹம், பய துக்கத்தோடு, கண்டு "சங்கல்பத்தில்" ஆழ்வது, "துவைத" விருத்தி என்னும் தாவ விருத்தி ஆகும். ஓர் ஞானி, அகண்ட விருத்தியிலேயே, இருக்க வேண்டும்!



58. உ

"கோடானுகோடி" மந்திரங்களையும், உபதேசிப்பவர், "சாமான்ய குருவாகும்."

"அதுவே நீ." "நீயே அது" என நம் "ஆன்ம" சொரூபத்தை "மட்டும்" அனுபவ நிலையில், உணர்த்துபவர், "ஸத்குரு" ஆகும்!

59. அனைத்தையும், "ஒன்றே" என "பொருந்தி" செய்வது, சிரவணம் ஆகும்! அதனால், அஸம்பாவிதம், அழியும்! மேலே கூறியதை, சிரத்தையுடன், "பொருந்தி" செய்வது, மனனம் ஆகும்! அதனால் சந்தேகம் அழியும்! மேலே கூறியதை, எல்லாம் ஒன்றே என, "விரிந்து" செய்வது, நிதித்யாசனம் ஆகும்! அதனால், விபரீத, விரோத, விசித்திரம், நாசம் ஆகி, எல்லாம் ஒன்றே "அதுநாமே" என்ற "ஸ்வய அனுபவம்" தானே கூடும்!

60. தத்த்வம் அஸி, உபதேசமாகும்! அகம்பிரம்மாஸ்மி, அனுபவ வாக்கியமாகும்! பிரக்ஞானம் பிரம்மம், அப்யாச வாக்கியமாகும்! அயமாத்மா பிரம்மம், சபையோர் சம்மதிக்கும் சிஷ்யனின் ஸ்வய அனுபவ வாக்கியமாகும்!



61. உ

"த்வைதத்தை" அகற்று! "அத்வைதத்தில்" நிலைத்து நில்.

"பதமுக்தி" வேண்டாம்! "பரமுக்தி" வேண்டும்! அதுவே நாம்! நாமே அது! என நிலைத்து நில்!

62. "வாக்கை" விரும்பி சொல்லாதே! "பலருடைய" வாக்கையும் விரும்பி கேட்காதே! "ஒரு கருத்தை" பலபல கருத்தாக, பிரிந்து, பிரித்து பார்க்காதே! "அந்த ஒன்றே நாம்" என நிலைத்து நில்!

63. "குற்றம்" நீக்குக! "குற்றபடி" நில்! "படிப்பினைகளை" "அனுபவத்தை" காட்டு.

64. "(வேறுபட்ட நூல்களும்) மாறுபட்ட நூல்" படிக்காதே! எது உனக்கு அனுபவம், கொடுத்ததுவோ அந்நூலிலேயே, "உள் ஆழ்ந்து" மூழ்கு! மூழ்கவனமும்; தர்க்கமும் வேண்டாம்! "தற்கவனம்" அவசியம் தேவை! அதனில் அது என ஆகுவாய்!

65. அனைத்து "நாமரூபங்களும்" "உனக்கு" அயலாக என்றும் இல்லை என்ற "பார்" பாவனையால் "உள்மனக்கவல்" நிறுமட்டும், ஒர்மித்து, மூழ்குவாயாக! அதுநாம் என ஆவாய்!



66. "நாமரூப" வாக்கை குறைத்துக் கொண்டால், "அநுபவம்" பெருகும்! அங்கு "ஸத்ஸித் ஆனந்தமாகவே" இருப்பாயே!

67. துவைதம்! அத்வைதம்! லௌகீகம்! வைதீகம்! பரமார்த்திகம்! உண்டு! இல்லை! என்ற "இப்பேதாபேதம்" அகற்றி விட்டு, பின்னமில்லாத, பரப்பிரம்மம் நானே என, அனுபவத்தை கூட்டி, "அதுநான்" என ஆகுவாயாக!

68. "திடஞானம்" இல்லாதார்க்கு, உலகம் "நாமரூப ஜீவசொரூபமாக" தோற்றும். "திடஞானம்" உள்ளவர்க்கு "பர" சொரூப அம்ஸமாகிய, "மண்ணை" தோற்றும்!

69. "திடஞானம்" பெற்றவர் துன்பம் சஞ்சலம் எய்தார். அவரே பிறந்த "பிறவிக்கடன்" செய்து முடித்தவராவர். அவர் எந்த நொடியும் "ஏகபராயுடையவராகவே" இருப்பர்.

70. "தன் அறிவும் அறிவை" அடைந்தவரே "ஆவரண" மயக்கமும், "விக்ஷேப" கலக்கமும், போக்கியவராவர். அவர் பவ பந்தம் நீங்கிய, ஜீவன் முக்தி பெற்றவராவர்.



71. "ஸத்குரு நாதனிடம்" கேட்ட, அத்வைத பாடத்தை "ஸம ஸாதகர்கள்" வசம், ஸஞ்சயனம் செய்து கொண்டு, "அதுவே நாம்" என்ற உணர்வோடு, இருக்கவேண்டும்!

72. வேத வேதாந்த ஸாஸ்திரம், புராண இதிகாசம், ஆகமம் முதலிய "த்வைத அத்வைத, பேதாபேதம்" அனைத்தும் இல்லவே இல்லை. இருப்பதெல்லாம், "ஒன்றே! அது நாமே" என நிலை பெற்று நிற்பாயாக!

73. "ஸித்தே சத்தம்" என ஆயிற்று. சித்தமே "நாமரூப ஜகம்" ஆனது. அதுவே "ஸம்ஸாரம்!" எனப் பேசப்படுகிறது. ஆகவே, ஜகமோ, ஸம்ஸாரமோ, "ஆத்மாவையன்றி" தனியாக இல்லவே இல்லை!

74. ஸித்தன் வடிவமே, "மனம்"! மனதின் தோற்றமே, "ஜகம்"! மனதின் "ஸங்கல்பமே" அனைத்து தோற்றங்களும்! ஆகவே, "ஸித்தாகிய, ஆத்மாவை" தவிர, வேறு எதுவும், இல்லவே இல்லை!



75. உ

"ஸித்தாந்தயஸம்பிடமே" இந்த "மனம்" தோன்றி; "ஏம்பிடமே" இருந்து விளையாடி, "ஏம்பிடமே" ஒடுங்கி விடுகிறது. ஆகவே, ஸித்தாந்த ஏம்மையல்லாம் எவையுமே இல்லை.

76. "ஸித்தாந்தயஸம் ஸங்கல்பமே" ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகள். ஆகவே, "ஸித்தாந்தயஸம்மை" அல்லால், எவையும் இல்லை.

77. "ஸித்தாந்தயஸம்முனீனே" கனவு நனவு ஆகிய அனைத்து தோற்ற நாமரூப பொருள்களுமாக இருப்பதால் "ஏமக்கு அயலாக" எவையுமே இல்லையென்று "பரஉணர்வோடு" இருந்து அதுவென ஆகுவராயாக.

78. "அகம்பிரம்மம்" "பிரம்மம் அகம்." "நாமே அது!" "அதுவே நாம்" என்பர பாவனையானது "விவேகத்தையும்!" "ஸத்குரு கருணையையும்!" திட உணர்வான "வைராக்கியத்தையும்!" "ஸ்ரீபகவான்" கருணையையும் கிடைக்கும்! நிலைக்கும்! அனுபவமாகும்!



79. உ

முன் பாடலில் கூறிய, அகம் பிரம்மம் என்ற "பரபாவனையை" சற்று "ஸ்திரமிட்டு" சொன்னாலும், அதை "சிரத்தையோடு" ஏற்றாலும்; "ஸ்வய அனுபவம்" பெறும் பரியந்தம், இடைவிடாமல் செய்ய வேண்டும். இது ஸ்ரீமஹான்களின் அனுபவமாகும்.

80. "மறைப்பில்லாது" "கெட்டுப் போகாது" "பூரண அறிவு" சொரூபமான "பிரம்மத்தை" தவிர, நாம ரூப, ஜகத் ஜீவ, ஈஸ்வராதிகள் இல்லவே இல்லை!

81 அந்த "பிரம்மமே" பஞ்ச பூதங்களாகவும் பஞ்ச கர்த்தாக்களாகவும், ஜகத் ஜீவ, அனைத்து சொரூபங்களாகவும், அனைத்து "காரண காரியங்களாகவும்" தோற்றுகிறது "அதற்கு" அன்னியமாய், எதையும் இல்லை! நாமும் அதற்கன்னியமாய் இல்லை!

82. அனைத்து "நாமரூபமும்" வேறு! "நாம்" வேறு! "அது" வேறு! என்ற "பேதபுத்தி" யானது; "அதுவே நாம்! நாமே அது" என்ற "பர" பாவனையால், நாசமாகுமே தவிர, வேறு எந்த சாதனையாலும் நாசமாகாது! கர்மவினையும் நாசமாகாது!



# 83. உ

அகம் பிரம்மம்! ஜெகம் பிரம்மம்! என்ற
"பாவனையால்" சந்தேகம்
நாசமாகும்! விபரீத பாவனை ஒழியும்!,
இவ்வாறு பிணைப்பாகிய "பந்தம்"
(இவ்வாறு தர்மா தர்மங்கள் அனைத்தும்)
"நாசமாகி" "அபரோட்ச" ஞானம் சாந்தியமாகும்!

# 84. தீர்த்தம், மூர்த்தி, ஸ்தலம்,

"ஜபதபம்" "தேவ தெய்வ பூஜை",
சேவை, அனைத்தும், ஏவ் வொன்றாக, இயல்பாக,
மறைந்து "அதுவே நாம்" என்ற நிலை பெற முடியும்.
நின்றால் தான்

# 85. கோடானுகோடி

"கோடானுகோடி" மந்திரங்களையும்,
இவைகளை, முறைப்படி "ஓதும் குருவையும்",
அசையும் மனதின் "குறைவு நிறைவுகளையும்" ஒதுக்கிவிட்டு, "அதுவே நாம்" என ஆகுவாயாக.

# 86. "காமக்குரோதாதி"

"காமக்குரோதாதி" ஆறு குணங்களையும், வியாபாரம், விளம்பரம், ஆடம்பரம், சந்தேகம், கலக்க பயம், இவைகளையும், துவைத அத்வைத பேதம், ஆகியவைகளையும், இது சம்பந்த, அனைத்து "நாமரூப" சம்பந்தம், அனைத்தையும், இயல்பாக நீக்கி விட்டு,
"அதுவே நாம்" என ஆகுவாயாக!



87. "எம் அறிவு சொரூபமான் ஆன்மாவாகிய" எம்மிடத்தில் அனைத்து "நாமரூப" ஜகத் ஜீவர்கள், தோன்றுவதால், "எமக்கு" அன்னியமாய் எதுவும் இல்லை யென்ற "பூர" ஞானத்தால், அது நாம் எனை ஆகுக!

88. "உலகம் ஸத்யம்" என்றால், "எம் உறக்கத்தில், எமக்குமட்டும் இவ்வுலகம் இல்லை! அச்சமயம் எமக்கு இல்லாத இவ்வுலகம், "இருந்ததென்ன? அது போயதென்ன?" ஆகவே, உலகம் இல்லவே இல்லை! யாம் யாமாகவே இருக்கிறோம்! "யாமே" ஸத்யம்!

89. "மனம்" எண்ணினால், "உலகம்" உண்டு! "மனம்" எண்ண மற்று மறந்தால் "உலகம்" இல்லை! ஆகவே "மனதிலிருந்தே உலகம்"! "அது நாம்" ஆனதன்மையினால், உலகம் இல்லவே இல்லை! அப்படிப்பட்ட உலகம், தேவையில்லை ஆகவே "நாம்" அதுவே!

90. "குட ஆகாயமும்" "மஹா ஆகாயமும் ஒன்றே" ஆகவே இங்கு குடமே தேகமும் உபாதையும் ஆகிறது! குடம் (சரீரம்) எம் கற்பனை கற்பனை இல்லாத இடத்தில், குடமும் சரீரமும் உலகமும் இல்லை! ஆனால், "ஸத்ய" சொரூபமாகிய "யாம்" முக்காலமும்; எக்காலமும் உண்டு. யாம் காலாதீதமானவன்.



91. உ

“சிவோஹம்” = நாம் சிவமே! சிவமே நாம்!!

“தத்வம் அஸி” = அது வாகயாம் இருக்கிறோம், என்பதே பொருள் ஆகும்! அது போல, “ஏகம்” இந்த நாமரூப ஜகம், “இருக்கிறது!” ஆனால் நாமரூப ஜகமாகயாம் இல்லை யென்பதே ஸத்தியம்!

92. “மறைமெய” “ஸர்ப்பயான” ஜகத்தை, “நாமரூபதோற்றமாக” காண்பது பொய்யே! நாமரூப தோற்றம் இல்லாமல் “அது” என உணர்வது மெய்யே!! நாமரூப தோற்றத்தை, “ஜகம்” என “சொந்தம்” கொண்டாடும்போது அது “பவபந்தம்” என ஆகிவிடுகிறது. நாமரூப தோற்றத்தை இல்லாமல், “அது அதுவே!” என்றும் அது நாமே என உணர்வது, பவபந்தமற்ற மெய் ஆகிவிடுகிறது.

93. “மண்ணே” (பரமே) “பொன்” (ஸ்ரீ பகவான்) என ஆனது! அப் பொன்னே “ஆபரணம்” (ஜீவசொரூபம்) என ஆனது! மேலே சொன்ன பொன்னும், ஆபரணமும், தங்களுடைய “நாமரூபங்களை” இழந்தால், அதனால் உண்டான “மயக்க கலக்கபயமும்” அதனால் தோன்றிய “சொந்த பவ பந்தமும்” இல்லாதொழியும். அங்கு நாம் நாமாகவே இருப்போம்!



94. உ

"மறைமை" கற்பனைக்கும்! "மாயா"வின் தோற்றத்திற்கும்! "நினைவுகளுக்கும்" அவஸ்தைகளுக்கும்! இவற்றின், "நாம ரூபங்களுக்கும்" ஆதாரமாயும்; ஆதரவாயும்; ஆதாரமாயும் அமைந்தது, "ஆத்மாவாகிய நாமே" என உணர்க!

95. "பிரம்மத்தில்" பிரபஞ்சம் இல்லை! "நாமரூப பிரபஞ்சமாக" பிரம்மம் இல்லை!
மை
பிரம்மத்தின், அம்சமான, "ஸித்" சொரூபமே நம் "சித்தமாக" தோற்றச் செய்து, நாமரூப பிரபஞ்சத்தை தானே உண்டுபண்ணி, அதுவே "மாயா மனதை" வைத்து, விளையாடிக் கொண்டிருக்கிறது. இது சித்தமாகிய (ஸித்தாகிய) "மனதின்" செயலே. "பரம் ஸித்" சொரூபமாகிய "அதுவே" என உணர்.

96. "ஆத்மாவாகிய" அதனிடத்தில் "இருமைகள்" இல்லவே இல்லை! அந்த ஒன்றே தம்மிடம் தோன்றிய "மாயா மனதை" வைத்து "கனவு" காட்சி போல், விளையாடிக் கொண்டிருக்கிறது. அதை "அறியாமையினால்" ஜீவர்கள், ஜகத் ஜீவ, ஈஸ்வராதிகள் என, கதை கதையாக பேசிக் கொண்டிருக்கின்றனர்!



97. "அஹம்ப்ரம்மம்" (நாம் அது) பாவனையானது, "மாயாமோஹம்" "முடிச்சு" "ஆதி வியாதி" (சஞ்சிதம் & ஆகாமியம்) கவலை பயத்தால் வரும் "சந்தேகம்" அனைத்தையும் அழிக்கும்!

98. வேத வேதாங்களை பல முறை போதித்தாலும்! "கேட்டாலும்" பல முறை "படித்தாலும்" ஸ்ரீ பகவான் "கருணை" இல்லையானால், சாத்தியமாகாது!

99. "திடமான உறுதியினால்" "நாமரூப" உடலையும்; உலகையும், பொருள்களையும், கற்பனையின் நாமரூபமாக இல்லையென்றும், "அது" வாகவே இருக்கிறதென்றும்; "நாமும் அதற்கு" அன்னியமில்லையென்றும்; உணர்ந்தால், இந்த நாமரூபம் அனைத்தும், தாங்குபவன், கையில் உள்ள பூவதை எப்படி நழுவி விடுமோ, அப்படி "நாமரூபம்" அனைத்தும் "உன் சாதனையை" அனுசரித்து, "அனுஅனுவாக" மறையும். எப்படி மறையும் என்பதை, அனுபவத்தில்தான் உணர முடியுமேதவிர அதை "வாக்காலோ, வரிவடிவிலோ" சொல்ல எவராலும் முடியாது!



100. உ
ஐந்து "பஞ்சபூதங்களும்" அதன் கர்த்தாக்களாகிய "திரிகர்த்தாக்களும்", பந்தப்பட்ட "ஜீவனும்", மற்றும் அனைத்தும், "ஏந்நாம ரூபத்துடனும்"! இவ்வளவே இவை. மேலே கூறிய, இவை அனைத்தும், அந்த "ஒன்றாக" இருக்கிறார்கள்! அந்த ஒன்றாகவே, "நாமும்" இருக்கிறோம் என உணர்ந்தால், "பழுத்தபழம்" எப்படி, மரத்தை விட்டு நழுவி விடுமோ, அதே நிலையில், "நாமரூப ஜகம்" கனவுக்காட்சி போல், உன்னை விட்டு, அகன்று விடும்!

101. அனைத்து, "லௌகீக". "தெய்வீக" கர்மாவும், அதன் செய்கைகளும், இந்த "மாயா மனதின்" விளையாட்டே! அது நாமும் அல்ல! அது நம்முடையதும் அல்ல! நாம் "அந்த" காலாதீத "ஒன்றே!"

102. குற்றம் குறை இல்லாத "உபாதைகள்" எதுவும் இல்லாத, "பர" சொரூபமே நாம்! விரிவாக காணக்கூடிய, பேசக்கூடிய, நாமரூப ஜகத் எதுவும், நாமும் அல்ல! நம்முடையதும் அல்ல!! என்ற "அகண்டாகார நிச்சயத்தில்" இருப்பாயாக!



103. "எல்லாம் ஒன்றே" அது "பரமே" அது "நாமே" என்று "அனுபவஞானிகள்" சொல்வதையும், எம் "ஸத்குருநாதரும்" அவ்விதமே, எமக்கு போதித்து, எம்மை அதுவாகவே ஆக்கிய தன்மையாலும், "சந்தேகம்" இல்லாமல், "அது நாம்" என ஆகுவாயாக!

104. "நாமரூபமாக" தோன்றும் அனைத்து "ஜகத் ஜீவ" தோற்றங்களும், காவா "அந்த ஒன்றே" உன் "நிஜம்" கருதியே, இப்படி போதிக்கிறோம்! இது எம் "ஸத்குரு" மேல் "ஆணை"! சற்றும் சந்தேகியாமல், அதுவே நாம் என ஆகுவாயாக!

105. தன்னை அறிய, தமக்கு ஓர் கேடில்லை! தன்னை அறியாமல், தாமே கெடுகின்றார்! "தன்னை அறியும் அறிவை" அறிந்த பின்னர், தன்னை அர்ச்சிக்கத் "தானே" இருந்தானே! என்றபடி, உன்னுள்ளே இரு! வெளியில் தேடாதே! காணாதே! கேளாதே! பேசாதே! உன்னை அசைப்பது உன் மனமே! உன் மனதை "மௌனமாக்கு" அது நாம்! என ஆகுவாயாக!



106. "உன்னில் நீங்க" வேண்டுமானால்; உனக்கு அயலாக, தோன்றும் தோற்ற "நாமரூபம்" ஆகிய, அனைத்துமே, "எமக்கு" அன்னியமாக, "என்றென்றும்" இல்லவே இல்லை என்ற, திட உணர்வுடன் கூடி, "எம் ஸௌக்யமே" எம் கவனக்குறைவால், மனதால் பந்தப்பட்டு "யாம்" அம்மனதாலேயே, பந்த நிவர்த்தியாகி, "அதுவே யாம், யாமே அது" என்று "யாமாகிவிட்டோம்" என ஆகுவாயாக!

107. குழந்தாய்! "நிச்சலனமான அகண்டானந்தம்" பெறுவதுவே, உன் "ஸௌக்யமாகும்!" மேலே, இதுவரை கூறியவைகளில், "அனுப்பிரயோகமும்! தைலதாரைபோல் ஸிரத்தையுடன்" "நீ நடப்பாயானால்! யாம் உறுதிகூறுகிறோம்!" என்று ஸ்ரீ ஸத்குருதேவரே, சொல்லும் நிலைக்கு



உ

"ஓர் ஸத்சிஷ்யன்" நடந்து கொண்டான் என, இதை முடிக்கிறேன்!

"துவைத தோற்றம்" எப்படி மறையும் என்பதை அனேக இடங்களில், யாம் உணர்த்தியிருப்பதால், "அதை இதில் எழுதாமல்" இதை நிறைவு செய்கிறேன்!

"108 - பலனும்" இல்லை! "பலமும்" இல்லை! இது இத்தனையது என, "விளக்கவுரைக்கும் வரியும்" இல்லை! இதை "சொல்வாரும்" இல்லை! இதை "கேட்பாரும்" இல்லை! காலாதீத "பராசொரூபமும்" தன்னை காட்டிக் கொள்வதும் இல்லை! இதை உணர்ந்த "ஸத்குருவும்" "வியாபாரம்/விளம்பரம்/ஆடம்பரம்!" அற்றவராக இருப்பதால், "அவரையும்" காலாதீத "அதையும் உணர்ந்திடப் புலன்/ஏகலைவன்/தன்னையே அர்ப்பணம்" செய்யும் "பூரணவனும்" இல்லை! ஆனால் சிலர் உண்டே!!!!



தன்னை ஓர் "ஏழையாகவோ"
"படகாகவோ" ஆக்கிய நிலையில்,
நம் "ஸத்சிஷ்யர்களின்"
"ஸ்ரீபாதம் தாங்கும்"
அதாவது "கண்டிப்பு" / "தண்டிப்பு" / நிலையில்,
இல்லாமலும், "பொறுமையே" நம் கவசமாய்
அமைந்துக் கொண்டு, "அமைதி" / "ஸாந்தி" /
"ஓர்மை" / நம் சிஷ்யர்கள் மேல் "பரிபூரண
நம்பிக்கை" உடையவராய், / நம் அன்பர்களிடம்,
எந்நிலையிலும், எக்காலத்தும், எவ்விடத்தும்,
"வியாபாரம்" / "விளம்பரம்" / "ஆடம்பரம்" /
இல்லாதவராய், "போட்டி பொறாமையில்"
உந்தப்பட்டு, "பேர்புகழ்". "பட்டம்". "பதவி"
அபிவிருத்தி யென்ற "பிரவர்த்தி" இவைகளை,
நாடாதவராய், அந்த ஒன்றை மட்டுமே நம் அனுபவத்தால்,
"உணர்ந்தவராய்" எளிமைக்கும் எளிமையாய்,
இனிமைக்கும் இனிமையாய், "நான்" / "எனது" என்ற
"அஹங்கார" "அபிமானம்" அற்றவராய்.



உ

வேத வேதாந்த ஸாஸ்திரத்தை, "மட்டும் போதியாதவராய்"! நம் "ஸ்வயஞான அனுபவத்தையே" "போதிப்பவராய்" அதாவது, "வாழ்ந்து" காட்டுபவராய், "இறை பரகருணையை" முழுமையாக பெற்றவராய் அமைந்த ஓர் "ஸத்குருவை" இக்கலியுகத்தில் காண்பது, மிக, மிக, மிக, மிக, மிக, மிக "அரிதாகும்"!

"ஆஹ?"

இந்த "ஸ்வயஞான அனுபவ நூல்" (ஸ்ரீமத் ரிபு கீதையை) பெற்றவர்கள், பெரும் பாக்கிய சாலிகளே!

(பழத்தை பார்த்துக்கொண்டிருந்தால், "சுவையும்" தோன்றாது! "பசியும்" தீராது!! பழத்தை அதாவது "உண்பார்கள்" உறங்கலாம்!!! "ஜாக்ரதையில்" கொள்ளலாம்!)

உ



ஆத்ம பலமே   நாம் நாமான நூல்

"எல்லாம்" நாராந நூல்;

"பலனே நாம் ஆனா" நூல்;

சுவைக்கப்படுவது! சுவைப்பவன்!!
காணப்படும் பொருள்! காண்பவன்!!
அனுபவிக்கும் பொருள்! அனுபவிப்பவன்!!
சொல்பவன்! அதைக் கேட்பவன்!! என இன்னமும்,
பல நிலைகளில் சொல்லும், "இரண்டுபட்ட நிலை
(துவைதம்)" இல்லாத தன்மையால் மாயா

"மனம் படைத்தவரும்
அத்வைதம் விரும்புவதும்
இல்லை!" அந்த "அத்வைதம் அவர்
களை ஏற்பதும் இல்லை!!!
அதற்காக கவலைப்படுபவர்
எவரும் இல்லை! காரணம் அங்கு இரண்டில்லை அந்த ஒன்றும் தம்மைக் காட்ட ஆகவே செயல் இல்லை! அது செயலற்றது.
"இருப்பது ஒன்றே! அதுயாமே!
அது நீங்களே! இது சத்தியம்!!

பாபா.



உ

"அத்வைதம்" அவர்கள்.
"ஏற்பதும் இல்லை"!

இது, சற்று முரண்பாடான, கருத்தாக
தோற்றமாம்????? சற்று, கீழே கவனிக்கவும்!!!!!
அத்வைதம் என்றாலே, "நாமரூப" சம்பந்த,
மன வாக்குக்கு, அதீதமாயும்; குணம் குறிகளுக்கு,
அதீதமாயும்; கால தேச வர்த்தமானம், (வியாபாரம்)
அற்றதாயும்; காலாதீத, அந்த ஒன்றை
"உணர்த்துவதாயும்", அமைந்ததொன்றாகும்.
"அது":- "அபேதமானது"/ "அது":-
"குற்றம் குறை" இல்லாதது! "அது":-
"விருப்பு வெறுப்பு" இல்லாததாகும்!
இங்கு "ஏற்பதும் இல்லை" என்றால்; விருப்பும்
வெறுப்பும், தோற்றப்படுகிறது. "ஆனால்?"
ஏற்பது இல்லையென்பது, மேலே கூறிய மூன்று
நிலைகளும் (இருந்தால்) அது "ஜீவத்தன்மை"
பெற்று விடும். ஜீவத்தன்மை இருந்தால் "அது"
அத்வைதம் உணர்ந்ததும் ஆகாது! ஏற்ற நிலையும் ஆகாது!!
அத்வைதம் உணர்த்துவதும் ஆகாது!! "அதை"



இந்த “ஜீவத்தன்மையையே குறிப்பிட்டு” “அத்வைதம் அவர்கள் ஏற்பதும்” இல்லையென்றோம்! ஜீவத்தன்மை என்றாலே, அது “ஓர் அஃறிணை பொருளாகும்!”

அதாவது, “அறிவற்ற” ஒன்றாகும்! அதற்கு, “மதிப்பும்! “மரியாதையும்! கொடுப்பதற்காகவே, “அவைகள்” என்று சொல்லாமல் “அவர்கள்” என, சற்று உயர்வாகச் சொன்னோம்! இது வார்த்தையின், மாயா ஜாலமே! இங்கு மதிப்பு மரியாதை, கொடுத்தால்தான், நாமும் மதிப்பும், மரியாதையும், பெற முடியும்! பொதுவாக, அறிவில்லா மாந்தர், அத்வைதம் ஏற்பது இல்லை! அதைப் போலவே அத்வைதமும், அறிவில்லா மாந்தரை ஏற்பதும் இல்லை! (இங்கு அத்வைதம் அவர்களை, கண்டு கொள்வதும், இல்லையெனப் பொருள் கொள்ள வேண்டும்!)

த ... பாபா.



# அனுபவம்!!!

1. அதுவே, பரகருணை நிலையில் இருந்து, இறை கருணை நிலையில், ஸ்ரீபகவானதை வந்தது.
2. தன்னை அறியும் மெய் அறிவே, ஆன்மாவாகும்.
3. நாமரூப ஜகமும், அதன் திரிகர்த்தாக்களும், ஆன்ம சொரூபமே.
4. கண்ணால் காணும், அனைத்து நாமரூப தோற்றங்களும், நம் ஆன்மாவுக்கு, அன்னியமாய் இல்லை!
5. ஆதி அந்தம்! தோற்றம் இருப்பு! சொந்தபந்தம்! மோட்சம்! இவை அனைத்தும் வாக்கிய விளக்கமே. அந்த ஒன்றே ஸத்தியம்.
6. எதிர்பார்ப்பு இல்லாத பக்தியும் ஞானமும், மோட்சத்தின் திறவுகோல் ஆகும்.
7. ஸித் சொரூபமே, சித்தம் என ஆனது! சித்தமே, நாமரூப, ஜகம் என ஆனது.



8) புத்தியாகிய, மனதின் கற்பனையே, அனைத்து மோஹ வஸ்துக்கள் என ஆனது. அதனால், கலக்கமும், பயமும், உண்டானது. அதுவே, அனைத்தும்! அதுவே நாம், என உணர்ந்தால், கலக்க பயம் நீங்கி விடும்!

9) மனதின் எண்ணமே, நாம ரூப ஜகத்தின், காமம், மோஹம், சந்தேக கலக்க பயம் என ஆகும்!

10) மனதின் எண்ணம், அற்றிருந்தால், நிஷ்டை, ஞானம், மோட்சம், சிவம், பிரம்மம் என்ற, ஜீவன் முக்தியென ஆகும்!

11) நீ காணும் பொருள் என, ஆனால் கலக்கபயமுண்டு. நீ காண்பவனை (ஆத்மாவாக) இருந்தால், கலக்க பயம் இல்லை. நிலைத்த ஆனந்தம் உண்டு!

12) அலையும் சித்தத்தை, ஸித்தாகவே (ஆத்மாவாக) வைத்துக் கொண்டால், நீ சித்தத்தை ஜயித்தவனாவாய். சித்தம் ஜயிக்கப் பட்டால், நாம ரூப ஜகம் நாசமாகும்.

13) சித்தத்தின் சிந்தனையால், நாமரூப ஜகம், உண்டு என எண்ணினால், ஜகம் உண்டு. அதே சித்தத்தால் நாம் சித்தமல்ல, நாம் ஸித்தே என உணர்ந்தால், நாம் ஆத்மாவே என, உணர முடியும். இதுவே நாம், நம் சித்தத்தை, ஜயிக்கும் வழியாகும்!

யத் பாவம் தத் பவதி என்பது இங்கு ஸார்த்தியமாகும்.



14 உ

ஸ்ரீ பகவானை, காண வேண்டுமானால், அனைத்தும் அவனாகவும், அனைத்தும் அவன் இயக்கமாகவும், அவனன்றி அணுவும், அசையாதென்பது, ஸத்தியமானால், அவனை நேருக்குநேர் தரிசிக்கலாம். நாம் அவனானால், நாம் அவஸ்யம், அது ஆகலாம்!

15 பொய் என்ற பொருளும் இல்லை! பொய் என்ற வார்த்தையும் இல்லை! அனைத்தும் அந்த ஒன்றே. என தைல தாரை போல், சிந்தித்தால் நீ அது ஆவாய்!

16 நீ புண்ணியவானும் இல்லை. நீ மாபாபியும் இல்லை. உன் மனப்பிரமையே, உன்னை எமக்கு அன்னியமாய் காட்டுகிறது. நீயும் யாமும், அனைத்தும் ஒன்றே. என திட உறுதியினால் நம்பு; நீ அதுவாகிய யாம் ஆவாய்.

17 ஊசி நாட்ட, இடம் இல்லாமல், அனைத்தும் அவ்வொன்றே, இத்திட பாவனையே, மனதை மறந்தாக்கும் வழியாகும். இதற்கு சொல் அற சும்மா இரு.

18 வாய் ஞானம் வேண்டாம். அனுபவ ஞானம் வேண்டும். அதற்கு நீ அடங்கி இரு. பிறரை அடக்க எண்ணாதே. அதற்கு அதுவே நாம்! நாமே அது! என மனசலன சஞ்சல மற்று இரு. பரபாவனையே மனதை வெல்லும்!

19 உன்னை கெடுக்கின்ற, ஜகமோ, சித்தமோ, அஹங்காரமோ, இல்லவே இல்லை! அனைத்தும் அந்த ஒன்றே. உன் மனமய கற்பனையே, உன்னைப் பயமுறுத்துகிறது. அதுவே நாம் என சும்மாவே இரு.



(20) உ

அனைத்து கர்மாவுக்கும், மனமே காரணம். காண்பதுவும், கேட்பதுவும், அதுவே என இருந்தால், நாமரூபம் அனைத்தும், கோரமாக தோற்றமளி, சாந்தியாக, அவஸ்யம் மாறும். கலக்க பயம் நீங்கும்!

(21) எல்லாம் நலமே என, ஓர்மித்து சிந்திக்காததே, கலக்க பயத்திற்கு, காரணம் ஆகிறது. அதுக்கயலாய் அவன் இல்லை. அவனுக்கயலாய் நாம் இல்லை. நமக்கயலாய் உலகம் இல்லை, யென்பது ஸத்தியம். ஆனால், சந்தேக கலக்க பயம், இல்லவே இல்லை!

(22) எண்ணம், சொல், செயல், இவை மூன்றும், எமக்கு இல்லை. ஆகவே, கனவிலும், நனவிலும், காணும் பொருள் அனைத்தும், எம்முள்ளேயே, வந்து, இருந்து, மாறி, மறைந்து விடுவதால், எமக்கு அன்னியமாய், எவையும் இல்லை! ஆகவே யாமே அனைத்தும்! அனைத்தும் யாமே!

(23) மனம், மறைந்தாலும் வரை, அதுவே நாம்! நாமே அது என்ற பரபாவனையை செய். அதனால், ஞானசூரியன் உதிப்பான். அஞ்ஞான இருள் அகலும்!

(24) அஹமமதையற்று, அகம்பிரம்மபாவனையை செய். சந்தேகம், கலக்கபயமற்று அதுவே நாம்! அதுவே நாம் என திடமாக பாவனை செய்தால், களங்க கலக்க மனது இறக்கும். அம்மனம் மறைந்தாகி, ஸ்வயம் ஜோதியாகிய, ஆத்மாவே நீ ஆவாய்.



**25** மனம் சலிப்படைந்தால், நாமரூப ஜகம் தோன்றும்! மனம் அசைவற்று, அதுவே நாம் என, நிலை பெற்றால், அனைத்தும் பரமாகவும், அது நாமாகவும், இயல்பாக மாறிவிடும்!

**26** தனது மன முயற்சியென்பது, சர்வார்ப்பண நிலையில், ஆரம்பம், எல்லாம் அவனே! பின், முடிவான அனுபவத்தில், எல்லாம் அதுவே! இம் முயற்சியானது, சுபத்திற்கும், சுபம் கொடுக்கும்!

தனது மன முயற்சியினால்! என ஒரு வாசகம் வருகிறது. இதை சற்று உணரவும்!

மனம் மாயாவின் மகனாகும். மாயா ஸ்ரீபகவானின், கை கருவியாகும். ஆனால், அந்த மாயாவின், மகனான மனமோ, இந்த ஜீவனைப் பற்றியிருக்கிறது.

ஆன்மாவே ஜீவன்! ஜீவனே ஆன்மா! நான் என்னுடையது, என்ற அஹங்கார அபிமான எண்ணங்களை உடைய, இந்த மனமானது, அந்த எண்ணங்களாலேயே, புனிதமான இந்த ஆன்மாவை, ஓர் திரை போட்டு மூடிக் கொண்டதனால் தான், இந்த புனிதமான ஆன்மா, ஜீவன் என பெயர் பெற்றது. அந்த திரை, எந்த வினாடியில், நீங்குகிறதோ, அந்த வினாடியே, இந்த ஜீவன் என்ற, பந்தம் நீங்கி, புனித ஆன்மாவாகிவிடும். முந்தைய, மூன்று யுகங்களிலும், நான், என்னுடையது என்ற அஹங்கார அபிமானம், இல்லாதிருந்தது. இக் கலியுகத்தில் மட்டும் (கலி தோஷ பிரவர்த்தியாக) இந்த நான், என்னுடையது என்பது தோஷ பிரவர்த்தியாகவும். ஜனனமரண பீஜமாகவும் இருக்கும்! இருக்கவேண்டும்! இருந்தே ஆகவேண்டும், என்பதே விதியும் நியதியாகும்.



உ

நன்றாக கவனித்தால், இந்த நாமரூப ஜகத்தை நான், என்னுடையது என புசிப்பதுவே, மூலகாரணமாக, அமைந்திருக்கிறது. இதை விட்டு விட்டால், வேறு நிலையில், இவ்வுலகை புசிக்க, வேறு வழியே இல்லை. இந்த நான் என்னுடையது என்பதே, மனோ விருத்தியினால், அஹங்கார, அதிகார, ஆதிக்க, அபிமான, உடைமை உரிமை, ஆகிய, ஆறு பேராக இணைந்து இவ்வுலகை, கோர சாரமாக ஆழ்கின்றனர்.

இதன் முக்கியம், என்னவென்றால்? நாமரூப, உலகம் அனைத்தும், ஸ்ரீபகவானுடையதே. அவ்வுலகை, மனம் படைத்த இந்த மனிதன், அறியாமையினால், நான், என்னுடையது என்று, அஹங்கார உரிமையும். அபிமான உடைமையும், பாராட்டியதால், புண்ணிய பாபம் என்ற, வினை இம்மனிதனைப் பிடித்துக் கொண்டது. இப்புண்ணிய பாபம், நசிக்க வேண்டுமாயின், ஸ்ரீபகவானுடைய உலகை, எல்லாம் நீயே என்றும், எல்லாம் உன்னுடையதே என்றும், சர்வார்ப்பணமாக, விட்டு விட வேண்டும்! வேறு மார்க்கம் இல்லை. இப்படி விடுவதென்பது, சாதனையல்ல!

இதுவே, தனது மன முயற்சியாகும்!

ஏ கேடு கெட்ட மனிதா! அடுத்தவன் (ஸ்ரீபகவான்) பொருளை, என்னுடையது என சொல்வது, உனக்கு வெட்கமாயில்லை?

அவனும் (ஸ்ரீபகவானும்) எம் பொருளை, எமக்கு கொடுத்து விடு, என கேட்கவில்லையே!

அவன் (ஸ்ரீபகவான்) சொல்வதாவது:- கொழுந்தே! எம் பொருள்கள் அனைத்தும், உனக்கு, விளையாட கொடுத்தோ தவிர, உரிமையும், உடைமையும், கொண்டாட கொடுக்கவில்லை. எம் நாமாவை சொல்லி, எடு! கொடு! விளையாடு! அதனால், அப்பொருளின், புண்ணிய பாப வினை, உன்னைப் பற்றாமல், யாம் கவனித்துக் கொள்கிறோம் என்கிறான். அப்புண்ணிய பாபம், உன்னைப் பற்றாத தன்மையால், உனக்கு, ஜனனமும் மரணமும் இல்லையென்றே பிரமாண



உ

மாகச் சொல்கிறேனே? வீண் அவஸ்தை உனக்கு ஏன்? உன் மனமும், எம் மாயா விளையாட்டே! அம்மன எண்ணத்தின் ஜீவமாக, பார்ப்பது, கேட்பது, பேசுவது, கொடுப்பது, வாங்குவது, இவை அனைத்தையும், எல்லாம் நீயே என விட்டுவிட்டால், உலகம் உன்னை (உன் மனதை) விட்டு விடும். பின் அதே மனதால், பரசொரூப அம்ஸமான, உன் ஸத்குரு தேவரிடம், எல்லாம் ஒன்றே! எல்லாம் நலமே! எல்லாம் நாமே! என சர்வார்ப்பணமாக, விட்டுவிட்டால், அங்கு ஸ்ரீ பகவானிடம் எல்லாம் நீயே என, விட்டதனால் வினை நாசம் அடைகிறது. அங்கு பரசொரூபமாகிய, ஸ்ரீ குருதேவரிடம், எல்லாம் ஒன்றே! எல்லாம் நலமே! எல்லாம் நாமே என, விட்டுவிடுவதால், மனம் நாசம் அடைகிறது. வினையும், மனமும், நாசம் அடைந்தால் வினையும் மனமும், இல்லாத ஸ்ரீ பகவான் நீதானே? நீயே ஸ்ரீ பகவான் ஆனால் பின் சாதனை ஏது? சாதனை எனும் பயம் வேண்டாம்! இந்த தனது மன முயற்சியென்பதே:- பொறுமை! அன்பு! பணிவு! உள்ளக்கனிவு! எதையும் நலமே என ஏற்றுக்கொள்! உன் எல்லாம் நலமே என்ற எண்ணமும், வாக்கும், உன்னை அடக்கும்! பின் அதுவாக்கி விடும்! இதுவே, தனது மன முயற்சியாகும்!

27 நனவும் கனவும், நம்முள்ளே, என உணர். அக்காட்சி எம்முடையதே! அங்கு காண்பவன் யாமே. எமக்கு அயலாக, எதுவும் இல்லை! ஆனால், அனைத்து நாமரூபமும், யாம் இல்லை. அந்த நாமரூப, தோற்றத்திற்கு, யாமே ஆதாரம். எமக்கு அன்னியமெவையுமில்லை.

28 கஷ்டம், கவலை, துக்கம், துயரம், கலக்கம், பயம், இவை அனைத்தும், மனதின் மருட்சியே. உண்மையில், இவை யாவும் இல்லவே இல்லை. ஆரம்பம், எல்லாம் அவனே என்றும்; முடிவில் எல்லாம் அதுவே என்றும்; பாவனை செய்யும்போது, அவனே அது ஆவான்; அதுவே நாம் ஆவோம்!



வருத்தம் இல்லாத இருக்கையிலும்,
வருத்தம் போல, வழுவுற்ற மாபாவி
மனதில் தோன்றும்! என ஓர் வாசகம்
வருவதை கவனிக்கவும்!
இதன் பொருள் :— உண்மையில் இந்த
நாமரூப ஜகத்தில், வருத்தம் என்பது, இல்லவே இல்லை!
இந்த ஜகம் உயிரற்றது! அது வெறும் ஜடமே!
ஆனால் புண்ணிய பாபத்தினால், பின்னவிட்ட, இந்த ஜட
உடலும், உயிரற்றதே! அதுவும் வெறும் ஜடமே!
ஓர் உண்மை, எப்படி வெளியாகிறது என்றால்?
இந்த ஜட உடலானது; ஜடசொரூபமான, இவ்வுலக
பொருளை, மறையும் வரை புசித்தே ஆக வேண்டும்!
இதையே, ஸ்ரீமஹான்கள் சொல்லும்போது :— ஜடவுடலும்,
ஜடநாமரூப அனைத்தும், அவரவர் வினையின் படி
(1) விகிதாச்சாரம் என்ற நிலையில், பகிர்ந்து கொடுத்த நிலையில்,
(2) பாரபட்ச தோஷம் இல்லாமல், எங்கும், எவரும், எதுவும், எம்
பேதமும் இல்லாமல்,
(3) எந்த தோஷ குணங்களும் இல்லாமல்,
(4) முன்னோர் பாடாய், திட்டமிட்ட காரியங்கள், (உலக நாம
ரூப பொருள்கள்) காரணத்தின் மூலமாக (ஸ்ரீ பகவானின்
மாயாவினால்) அனுபிசகாமல், ஒழுங்காக நடைபெறுகிறது.
இதுவே ஸத்தியம்!!!
ஆனால் இந்த மாயாமனமானது, உலகவிளையாட்டின் மோஹா
வேசத்தினால் (மோஹ ஆவேசத்தினால்) நான் என்னுடையது என
கர்த்தத்துவம் கொண்டு (தன்னை கர்த்தா ஆக்கிக் கொண்டு) தனக்குத்
தானே, விளையாடிக் கொண்டிருக்கிறது. இங்கு மனம் வசம் அகப்பட்ட
மனிதனுக்கு, மோஹவேசத்தின், இன்பமும் துன்பமும், பிரிவினை
பேதம் தெரிவதில்லை. ஆனால் மனதை வென்று அறிவு சொரூபமானவர்க
ளுக்கு, ஸ்ரீபகவான் சொரூபத்தில் இருந்து கொண்டு; ஆகா இது என்ன விநோதம்?
மாபாவி மனதினால் இப்படி சிக்கி அவஸ்தைப்படுகிறார்களே! விளையாட்டில்
வேதனைபடும் போது, ஐயோ நான் வேதனைப்படுகிறேனே என்றும்,



எனக்கு இப்படி வந்து விட்டதே என்றும்,
என்னுடையது, பறி போய் விட்டதே என்றும்,
இன்னும் பல பல, விதமாக அலறி துடிக்கிறான்.
வினையால் இன்பம் அனுபவிக்கும் போது,
நான் என், சாமர்த்தியத்தினால், வென்றேன்
என்றும், என்னால் தான் முடிந்தது என்றும்,
இன்னும் பல பல விதங்களாக,
(மனோமய கர்த்தத்துவத்தினால்) இன்பத்தினால், எகிறிக் குதிக்கிறான்.
இங்கும் இந்த, மாயாவி மனமானது, தவறால் தெரியாமல் ஆடுகிறது.
இவை அனைத்தும் ஸ்ரீ பகவானால் (விதியினால்) இவ்வுடலின் வினை
வைத்து, ஆட்டப்படுகிறது என, உணரவொட்டாமல் இந்த, யை
மாயாவிமனமே தடுமாறுகிறது. இம் மாயாவி மனதை,
(நல்லமனமாக) ஆக்க வேண்டும் என்றால், ஸ்ரீ பகவானின்,
கை பதுமையாக, இவ்வுடலை ஆக்கிக் கொண்டு, எந்த வினையும்
இன்பமோ துன்பமோ! வரவோ செலவோ! இன்பமோ இழப்போ!
எல்லாம் அவன் பொருளே! எல்லாம் அவன் செயலே!
அவனன்றி அணுவும் அசையாது! எல்லாம் நலமே,
நடைபெறுகிறது! நம் மனோமய கற்பனையின், தடுமாற்றத்தால்
சந்தேகம், கலக்கம், பயத்துக்கமாக, தோன்றுகிறதென்ற,
மெய் உணர்வான, அறிவு சொரூபமாக, இருக்கப் பழகிக்
கொண்டால், மாயாவிமனமானது நல்லமனதாக (அறிவாக)
மாறிவிடும்! சொந்த, பந்த, பாச, உறவு, நட்பு இவைகளினால்
பீடிக்கப்பட்டு, நான் என்னுடையது என், உடைமைகளினால் இந்த
மனம் வீழ்ந்து, மானவமானம், சூடு, சுரணை, வஞ்சனை, வெட்கம்,
இவைகளில், ஆழ்ந்து போனால், அது மாயாவி மனமாகி விடும்.
அவன் செயலால், அனைத்தும், நலமாகவே, நடைபெறுகிறதென,
சாந்தி சமாதானத்துடன், தன் காதுகளினால், நலமாக
வே, நடைபெறுகிறதென்ற, உணர்வுடன், நாவு நம்முள்,
அடங்கி நடந்து கொண்டால், அங்கு மனதின் வெளிப்பாடு
குறைந்து குறைந்து, தானே அயல்பாக நின்றுவிடும்!
இந்த நிலையே, மனம் மறைந்தா கிறதென்றும், அதே நேரம்
அதை, நல்லமனம் என்றும் சொல்லலாம்!



29 உ

நன்மை அறியும் அறிவே, கல்வியாகும்!
மற்றும் அனைத்தும், பாடம் படிப்பும் ஆகும்!
கல்வி ஆத்மஞானமாகும். பாடம் படிப்பு,
நாமரூப ஜகமாகும். முதலாவது,
ஜீவன் முக்தி ஆகும். இரண்டாவது, ஜனன
மரண விதையாகும்!

30 குற்றம் குறையில்லாதது, குறைவு நிறைவு
இல்லாதது, வளர்ச்சி தேய்வற்றது,
விருப்பு வெறுப்பற்றது ; அதுவாகிய நாமே!
அங்கு காண்பதோ, கேட்பதோ, எண்ணுவதோ,
விளக்குவதோ, எவையும் எமக்கு அயலாக,
இல்லவே இல்லை. யாமோ மகா மௌனானந்தம்.

31 நாமரூப ஜகமாக எண்ணாதே!
மலவுடலையும், நாமாக எண்ணாதே! ஸித்தாகிய,
ஆத்ம சொரூபமான, எம்மிடமே, இவைகள் தோன்
றியது. எமக்கு அயலாக, எவையுமே இல்லை யென,
அசைவற்றிருப்பாயாக.

32 எல்லாம் நாமே! நாமே எல்லாம்! என்ற
வாக்கியத்தை அனுதினமும், இடைவிடாமல்,
வாக்கால் சொன்னாலும், இந்த தர்மத்தால்,
அலைபாயும் மனமானது, மெள்ள, மெள்ள, மெள்ள,
அசைவற்று நிற்கும். இது ஸத்தியம்.



33 மேலே கூறிய நிலையில், அணு அணுவாக,
மனம் தாம் தானாய், தனித்து நின்றால், அனைத்து
குற்ற உணர்வுகளும், தாமே நசித்து விடும்.
அங்கு, அதுவே நீயாக, பிரகாசிப்பாய்.

34 இந்த பிரம்மான்ம பாவனையை, செய்பவர்
பஞ்சமா பாதகம், பல செய்திருந்தாலும், அவர்
அவஸியம், அப்பாபம் நீங்கி, ஜீவன் முக்தி
பெறுவர். இது ஸத்தியம். காரணம், புண்ணிய
பாபம் அனைத்தும், இவ்வுடல் உலகத்திற்கே!
இவ்வுடல் உலகம் நீயும் அல்ல. அது உன்னுடைய
தும் அல்ல. ஆன்மாவே நீ! நீயே ஆன்மா!

**பஞ்சமா பாபம்** (பிரம்மஹத்தி!
கோஹத்தி! குருஹத்தி! ஸ்திரீஹத்தி!
சிசுஹத்தி!) பல செய்திருந்தாலும்,
அவன் ஜீவன் முக்தி பெறுவான்!



உ

ஜீவன் முக்தி:— ஜீவன் முக்தியென்பது, ஓர்பந்த ஜீவனானவன், பூர்வபுண்ணியம், ஸ்ரீபகவான் கிருபை, ஸ்ரீ ஸத்குரு கருணையினால், ஜீவன் முக்தியில், வேட்கை அதிகரித்து, தன்னை அறியும் அறிவில், பிரவேசிப்பானாயின்,

(1) மேலே சொன்ன, பாபங்கள், மன சம்பந்தம் கொண்டு, உடலால் நடைபெற்றதாகும்!

(2) இன்று அந்த மனமானது, விவேக வைராக்கியம் கொண்டு, ஸ்ரீபகவானுடைய மாயாவில், கலந்து விட்டது!

(3) இங்கு மனம், மாயாவில் கலந்து, மயமாகிவிட்டபடியால், (புண்ணிய) பாபங்களை, ஏற்க அங்கு மனம் இல்லை!

(4) அப்பாபங்கள், உடலை தாக்கினாலும், உடல் வெறும் ஜடமே! மனம், உடலை விட்டு விட்டபடியால், அப்பாபம் நிலைத்து நிற்க, ஓர் தோற்றம், இல்லாமல் போய் விட்டது!

(5) இவ்வுலகம், பற்று வரவு, தீர்க்கும், ஓர் மேடையாகும்! அப்பாபங்களை, உடல் அனுபவிக்கும், விதி இருந்தாலும், மனம் செயலற்ற தன்மையினால், அப்பாபம், வலு இழந்தே ஆகவேண்டும். அது கனவாய் முடிந்து விடும்!

(6) ஆனால் அம்மனமானது, ஸ்ரீபகவானிடம், சர்வார்ப்பணமாக, விட்டநிலையிலும்; ஸ்ரீகுருதேவர் வாக்கில், முழு நம்பிக்கையினால், நாம் அதுவே! அதுவே நாம்! என விட்டநிலையிலும் இருப்பதனால், அப்பாபங்களின், செயல், உடலில் பிடிப்பு அற்றுப் போனதால், உடலை ஒன்றும் செய்ய இயலாது. அப்பாபங்களை, உற்ற மனமானது, மாயாவில் சென்று மறைந்தாகி விட்டதால் அப்பாபம் வலு இழந்து, நாசமடையும். அப்பாபமானது, கண்ணாடியில் தோன்றும் பாற்கிளி போன்று பயனற்றுப் போகும் என ஸ்ரீ அனுபவ மஹான்கள் அனுபவத்தினால் சொல்லக்கேள்வி.



(35) உ

அனைத்து நாமரூப ஜகமோ, அதன் திரிகர்த்தாக்களோ, ஆவரணமாகவோ, பொன்னாகவோ, இல்லை. இவை அனைத்தும், அவை தோன்றிய இடமாகிய, மண்ணாகிய, பரமாக இருக்கிறார்கள்.

(36) எமக்கு, அன்னியம் எவையுமில்லையென்று திட உணர்வு, பெற்றவனே, திடஞானியாவான். அவன் மூவுலகிலும் ஒருவனே.

(37) அந்த திடஞானிக்கு, ஞான நிஷ்டா சாதனம், எவையும் இராது. இருக்க இயலாது. (இருக்க முடியாது.) அவன் ஆவரண மயக்கமும், விக்ஷேப கலக்கமும், குற்றம் குறை, விருப்பு வெறுப்பு, பேதாபேதம், அற்றிருப்பான்.

(38) அந்த திட ஞானி, உலகமே நிர்மூலமானாலும், தம் தேகமே சிதைந்து போனாலும், எக்குணமும் அற்று, நிர்க்குணமாய், பட்ட மரம் போலும், குத்துக் கல்லைப் போலும், அசைவற்றிருப்பான்.

(39) ஜக வாசனை, பழக்க வழக்கங்களால், வாசனையேறி இருக்கும், இம் மனமானது, அத்வைதம் ஏற்காமல், த்வைதமாகவே காணும். இடையறாத, அகண்டாண்ம பாவனையால், அவஸ்யம், த்வைதம் மறையும். அத்வைதம் நிலை பெறும்.

(40) மேலே கூறிய, அகண்டாண்ம பாவனையில், மனம் நிலைத்து நின்றால், அதுவே மனம் மறைந்தான நிலையாகும். இதுவே மனம் மாண்டு போன நிலையாகும். இதற்கு, மேலும் சாதனைகள் எவையுமில்லை.



உ

**41** அதுவே நாம், நாமே அது என்ற அகண்டான்ம பாவனையை விட, இந்த ஆத்ம ஞானத்திற்கு, வேறு சாதனையும் இல்லை. மற்றும் அனைத்தும், பலத்தையும், (சக்திகளையும்) பலனையும், (சாதனையின் பலன்களையும்) கொடுத்து, பிறப்பிறப்பைத் தொடுப்பதாகும்!

**42** சிவ காலம், தனிமையை பழகு! வார்த்தையை குறை! எல்லாம் நீ என்ற, இறை அனுபவத்தை பெறு! எல்லாம் அது என்ற, பர அனுபவத்தோடு, பயம் கலக்கம், இவைகளை விட்டு, அது நாம் நாமே அது! என அகண்ட பாவனையில், கலந்து விடு.

**43** தேகம் நாம் அல்ல! உடைமைகள் சதமல்ல! உறவுகள் நிலையல்ல! அனைத்து நாமரூபங்களும், பரமாகிய, நமக்கு அன்னியமல்ல! என ஸ்திரமாக இருந்தால், மோஹம் என்னும் கண்கட்டு, அவிழும். நீ அதுவாகவே இருப்பாய்!

**44** மனைவியின் போஹத்தை, பரமாகிய அதன் நிலையில், ஸ்ரீபகவான் நடத்துகிறான் என, உறுதியாக நம்பு.
ஆசைக் குறைத்துக் கொள். காம எண்ணத்தை அகற்று. பிறமாதரை எண்ணாதே! எல்லாம் நலமே என எண்ணு நலம் பெறுவாய்! அது ஆவாய்!

**45** நாமரூப உலக எண்ணத்தை விடு. ஸ்ரீபகவான் என்ற எண்ணத்தை மட்டும் வை. பின் அவனையும், அதுவாக்கி, அதுவே நாம் என, கலந்து விடு. நிஷ்டையென்றுவே, நீ இஷ்டப்பட்டால் தான், முடியும். ஆகவே, சகஜ நிஷ்டையில், மயமாகுவாயாக.



46 உ

மாயையோ! அவித்தையோ! பந்தமோ
முக்தியோ! ஜகமோ! ஈசனே! இவை
அனைத்தும், மாயா மனதின் கற்பனையே
இக்கற்பனையின், நாமரூபம், பொய்யா
கும். அது தோன்றிய பரமே ஸத்தியம்
ஆகும் என, உறுதியாக எண்ணு! அதுவாகவே ஆகுவாய்!

47 அதுவே நாம்! நாமே அது! என்ற பிரம்மான்
ம பாவனையால், சஞ்சிதம் சாம்பல் ஆகும்!
ஆகாமியம் நின்று விடும்! பிராப்தம் முடிந்து
விடும்! கர்மா இவ்வா தன்மையானால் ஜன்மா இல்லை!

48 லௌகீகம், புண்ணிய பாபத்தோடு கூடியது!
தெய்வீகம், ஸத்திய தர்மத்தோடு கூடியது!
இவ்விரண்டும், பரமார்த்திகத்தில் இல்லவே இல்லை!
அங்கு அது நாம்! நாம் அது! என பட்டமரம் போலும்,
குத்துக்கல்லைப் போலும். அதை பற்றிருந்தால்,
அதுவே நீ ஆவாய்!

49 அங்க சுத்தியால், சித்த சுத்தி பெறலாம்!
சித்த சுத்தி என்ற, தெய்வ உபாசனையால்,
வினையின் கடுமை, குறைந்து, குறைந்து நாசமாகும்!
அது நாம்! நாம் அது! என அனுபவமானால், மனமே
நாசமாகும்! வினையும் மனமும் நாசமானால்,
நாம் அதுவாகவே இருப்போம்!

50 காலம், தேசம், வர்த்தமானம் (வியாபாரம்)
நாசமானால், நாமரூபங்களின், இருப்போ,
இயக்கமோ, பவபந்தமோ, காட்சி, வீழ்ச்சியென
அனைத்தும், நாசமாகி விடும்! இவைகளால்,
தோன்றும், சந்தேக கலக்க பயம், அனைத்தும்
நாசமானால், நாம் அதுவாகவே இருப்போம்!



51 உ

நாமரூப வஸ்துக்கள், எதுவும் தோன்றவோ, இருக்கவோ, மாறவோ, மறையவோ, இல்லவே இல்லை. அவை அனைத்தும், வார்த்தையின் மாயா ஜாலத்தால், விளங்கப்பட்டன. எம் வாக்கும் நின்றது. ஜகமும் மறைந்தது. யாம் முக்காலமும், அதுவாகவே இருக்கிறோம்!

52 நாமரூபம், அனைத்தும் மண்ணே! ஸித்தே, ஜீதமாக மாறி, மண்ணை மனதை வைத்து, விளையாடிக் கொண்டிருக்கிறது. மனவிளையாட்டை விட்டுவிட்டால், நாம் அதுவாகவே இருப்போம்!

53 எல்லாம் பிரம்மம் என, உணர்ந்து, அதுவே நாம் என, உணர்ந்து விட்டால், மாயாமனதின் போதை மயக்கம், நீங்கிவிடும். மனமயக்கம் நீங்கி விட்டால், நாம் அதுவாகவே இருப்போம்!

54 பண்டம் பதார்த்தம் என, ரூபம் இல்லை! பதமுக்தியென்ற, பதஅர்த்தமாகிய, நாமம் இல்லை! விதவிதமாகிய, எந்த நாமரூபமும் இல்லை! எல்லாமே, பரமாகிய மண்ணே இருக்கிறது. அப்பரம் நாமே! நாமே பரம் என, நிச்சயிப்பாய்!

55 அந்தகாவாதீத ஒன்றை, உண்டு என, சொல்லவும் முடியாது! இயலாது! அதை, இல்லை யென, சொல்லவும் முடியாது! இயலாது! அது விளங்குவதும் இல்லை. அதை விளக்குவாரும் இல்லை! அதைப் போல, நாமரூப ஜகத் தோற்றமும், இது இப்படித்தான், இருக்கிறது என, சொல்வதற்கில்லை. மாறி மாறி வரும், ஜகநாமரூபமும், சொல்லால் மட்டும், விளக்கம் பெறுகிறதே யன்றி, சொல் விளக்கம் இல்லை யென்றால், நாமரூப ஜகமும், அனைத்தும் மண்ணே! மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே என, திட உணர்வால் தெளிக!



**56** உ

மேலே சொன்ன, நிலையில் மனதை, ஸ்திரப்படுத்து! நாம் ஸம்ஸாரியோ, குடும்பியோ அல்ல. நாம் பிரம்மானந்த சமுத்திரத்தின், உப்புப்பதுமையே! யாம் பிரம்மானந்த சமுத்திரத்திற்கு அன்னியமில்லையென, சந்தேகமில்லாமல் தெளிக!

**57** உடல் உலக, நாமரூபம் துவைதம்! சூட்சுமரூப கவத் சொரூபம் சாட்சி, இது விசிஷ்டாத்வைதம்! அனைத்தும் நாமே, என உணர்வது சர்வ சாட்சியாகிய, அகண்ட பாவனை (அகண்டாகார விருத்தி) அதுவே நாம் என, உணர்வது அத்வைதம்! மேலே கூறிய, இரண்டையும் நீக்கி! கீழே கூறிய வண்ணம், நிலைத்து நில்!

**58** அனைத்து மந்திரங்களையும், உபதேசிப்பவர் சாமான்ய குரு! அதுவே நீ! நீயே அது! என சந்தேக, கலக்க பயமின்றி, உபதேசிப்பவர் ஸத்குரு! அதை சந்தேக, கலக்க பயமின்றி, ஏற்பவன் ஸத்சிஷ்யன்!

**59** அனைத்தையும், பொருந்தி செய்வது சிரவணம்! பொருந்தியதை, மனம் வருந்தி, செய்வது மனனம்! வருந்தி செய்வதில், எல்லாம் ஒன்றே. அதுவே நாம் என உணர்வால் ஒடுங்கி கலப்பது, நிதித்யாசனம்!

**60** தத் த்வம் அஸி! உபதேச வாக்கியமாகும்! அகம் பிரம்மாஸ்மி! அனுபவ வாக்கியமாகும்! பிரக்ஞானம் பிரம்மம்! மனனப்யாச வாக்கியமாகும்! அயமான்மா பிரம்மம்! ஞான சபைக்கு, யாம் தகுதியுடையவராகி விட்டோம் என, ஸ்வயஞானப்யாச வாக்கியமாகும்!



**61** உ

முக்தியோ? பக்தியோ? துவைதத்தில், ஆசை வைக்காதே! அத்வைதத்தில் நிலைத்து நின்று, அனுபவம் கூட்டு!

**62** தன்னை அறியும் அறிவு நிலைக்க வேண்டுமானால் :- வார்த்தை குறை! அதிக விளக்கம் பெறாதே! கொடுக்கவும் வேண்டாம்! ஒரு வார்த்தைக்கு, அனேக கருத்தை படிக்காதே! கேட்காதே! சுருங்கக்கூறல்! கற்றபடி நில்!

**63** உண்மை நிலைக்கேற்ற, ஒரு சாதனை நூலை, ஏற்றுக் கொள்! மற்றும் நூல்களை, தக்கதை ஏற்றுக் கொள். மற்றதைத் தள்ளு. மீண்டும் மீண்டும், அனுபவம் பெறும் வரை, மனனம் செய். பின் அதையும் நிறுத்திவிடு. சுவைத்து உண்பாயாக.

**64** ஸத்குரு வாயிலாக, உனக்கு தந்ததை மட்டும், ஏற்று, மற்றும் அனைத்தையும், தள்ளிவிடு! உன் ஸ்வய அனுபவம், நூலில் இல்லை! அனுபவம் உன் நம்பிக்கையிலும், வைராக்கியத்திலும் தான் உள்ளது.

**65** நனவிலும், கனவிலும், தோற்றும் நாமரூபம் அனைத்தும், உனக்கு அயலாக, இல்லவே இல்லை. பழக்க, தோஷ குணம், அழியும் வரை, அதுவே நாமென, அப்யாசம் செய். குண தோஷம் அழிந்தபின், சொல் அற, சுகமாக சும்மா இரு!

**66** ஸத்தும், ஸித்தும், ஆனந்தமும், இம்மூன்றும், நீயே! உனக்கு அயலாக இல்லை. முன் இரண்டும், வாக்கிய விளக்கம் ஆகும். பின் உள்ள ஒன்று மட்டும், உன் அனுபவ ஸ்வரூபம் ஆகும்! ஆகவே, வார்த்தைகளை குறை. அனுபவத்தை பெருக்கு! அதுவே நாம்! நாமே அது! என்பதே அனுபவம் ஆகும்!



67 ஓம்

துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம், எனவும் இப்படி, அப்படி! உண்டு, இல்லையெனவும் வீண் காலம் கடத்தாதே! அதுவே நாம், நாமே அது என சுகமாக, சும்மா இருக்கப் பழகு! தர்க்கம் பண்ணாதே!

68 நீக்கமற நிறைந்திருக்கும், பரசொரூபமானது, நாமரூபத்தில், மயங்கியவர்களுக்கு உலகமாக தோற்றும். அனைத்து நாமரூப ஜகமும், எம்முள்ளே, தோன்றி இருந்து மறைகிறதென, திட உணர்வுடையவர்களுக்கு, அனைத்தும், மண்மயமாகிய, பரமாக தோற்றும்!

69 அதுவே நாம்! நாமே அது! என நிலைத்து நிற்பதே, ஜீவன் முக்தி ஆகும். இந்நிலை பெற்றவரே, துன்பத்தை வென்றவர். அவரே, பிறந்த பிறவிப் பயனை, அடைந்தவராவார். செய்ய வேண்டியதை, செய்து விட்டார்.

70 தன்னை அறியும் அறிவாகிய, தம் யதார்த்த சொரூபத்தை, அடையாதவர் பிறந்ததும் வீணே! அவருக்கு, பவ பந்தமும், தொலைவதில்லை. பிறவிப் பிணியும் அகலுவதில்லை. அவர் இருந்தும், குணங்களின் பாரமே!

71 ஸத்குரு முன்னிலையில், உணர்ந்தவைகளை, ஸத்ஸங்கம் வாயிலாக, திட உணர்வு பெறுக! வேத வேதாந்த, சாஸ்திரங்களுக்கும், நீ உணர்ந்த அந்த ஒன்றே பொருளாகும்! அதுவே சோர்வு, அயர்வு, அனைத்தையும் நீக்கும்!

72 வேதம், வேதாந்தம், சாஸ்திரம், இதிகாசம், புராணம், ஆகமவிதி முதலிய அனைத்தும் அந்த ஒன்றையே உணர்த்துகிறது. இவை அனைத்தும், அந்த ஒன்றுக்கு, அன்னியமாய் இல்லையென்று திட உணர்வே, நீ அதுவாகும் நிலையாகும்!



**(73)** உ

ஸித் சொரூபமே, சித்தமாகவும்; அந்த சித்தமே, நாமரூப ஜகத்தாகவும்; அதில் ஸம்ஸாரமாகவும்; தோற்றம் எடுத்து, விளையாடிக் கொண்டிருக்கிறது!

**(74)** ஸித்சொரூபமே, மனமாகவும்; (மனமும் சித்தமும் ஒன்றே) மனமே நாமரூப ஜகமாகவும்; இவைகளை, அசைப்பிக்கும் ஸங்கல்பமாகவும் (எண்ணங்களாகவும்) இருந்து, தனக்குத்தானே, விளையாடிக் கொண்டிருக்கிறது!

**(75)** ஸித் சொரூபத்தில், தோன்றிய மனம், எம்மிடமே விளையாடி, எம்மிடமே லயமாகி விடுவதால், எம்மையல்லால், மனமோ ஜகமோ இல்லை!

**(76)** ஸித்சொரூபமாகிய, எம்மிடம் தோன்றிய, மனதின் எண்ண வடிவமே, ஜகத் ஜீவ, ஈஸ்வராதிகளின், நாமரூப தோற்றமாகும். இந்த நாமரூப தோற்றம், அனைத்தும் பொய்! அவர்கள் அனைவரும், எம் அம்ஸமாகிய மெய் ஆகும்! (ஆத்மாவே ஆகும்)

**(77)** ஸித் சொரூபமாகிய, எம்மிடம் தோன்றிய, மன எண்ணமே, நனவிலும், கனவிலும் காணும் அனைத்து, வஸ்துக்களும் ஆகும். அவ்வஸ்துக்களின், நாமரூபம், அனைத்தும் பொய்யே! ஆனால் அவ்வஸ்துக்கள், அனைத்தும் மண்மய பரமாகிய, எம்மையல்லால் வேறில்லை!

**(78)** அகம் பிரம்மம்! பிரம்மம் அகம்! அகமே எல்லாம்! என்ற, ஆத்மஞானமானது, ஆசிரியன் கருணையால் கிடைத்து, சிரத்தையின், விவேக வைராக்கியத்தால், ஸ்திரமாகி, பரகருணையாலும், இறைகருணையாலும், நிலைபெற்று, ஸ்வய ஞானனுபூதி கொடுப்பதாகும்!



79 உ

முன்பாடலில் கூறிய, அகண்ட பிரம்மான்ம பாவனையானது, தைலதாரை போல், சிந்திக்க சிந்திக்க, சந்தேக, கலக்க பயம் நீங்கி, அனுபவ பலமானது, கருங்கல்லைப் போல், அசையாமல் இருக்கும், அனுபவத்தைக் கொடுக்கும்!

80 எந்த மறைப்பில் வாமலும், எக்காலமும் கெட்டுப் போகாமலும், பரிபூரணமானதுமான; அனைத்திற்கும், காரண சொரூபமானதுமான பிரம்மம் ஒன்றே ஸத்தியம்! அதுவே நாம், நாமே அது!

81 அந்த பரப்பிரம்மமே, நாமரூப ஜகத்தின் அனைத்து வஸ்துக்களாகவும், அவைகளின் திரி காரணமான கர்த்தாக்களாகவும், மற்றும் சகலமுமாக இருக்கிறது. ஆனால், மேலே கூறியவைகளின், நாமரூபங்களாக இல்லை. அனைத்திற்கும், மூலமாகவும், ஆதாரமாகவும், ஆதாரவாகவும், அது இருக்கிறது. அதுவே நாமாகவும் இருக்கிறோம்.

82 நீ, நான், அவன், அவள், அது, இது, குரு சிஷ்யன், பிரம்மம், இவைகளை வேறு வேறாக, பேதப்படுத்தும், புத்தியை நாசம் செய். அதுவே நாம், நாமே அது, நாமே எல்லாம் என, ஐக்கியப்படுத்து. இப்படி இந்த ஒன்றினால் தான், ஓர்மை யென்ற, ஒன்றாக முடியும். வேறு கர்மாவினாலோ, கர்ம உபாசனைகளினாலோ, ஒன்றுபடுத்தவும், அது ஆகவும் முடியாது!

83 அதுவே நாம், நாமே அது, நாமே எல்லாம்! என்ற பிரம்மான்ம பாவனையானது, பதிபந்தம், என சொல்லும், இல்வற தர்மத்தையும், சந்தேக கலக்க பயத்தையும், நாசம் செய்து, தாம் தாமாக, நிற்கும்! அபரோக்ஷம் என்ற, ஜீவன் முக்தியையும் கொடுக்கும்!



84 உ

அயன், அரி, அரன், என்றும் தீர்த்தம், மூர்த்தி, ஸ்தலமென்றும், ஜபதப, தெய்வ சேவையென்ற, மனம் கவரும் நிலை ஒன்றும், இல்லவே இல்லை. மனம் மறைந்தாகும் நிலையில் அதுவே நாமென்ற, ஆன்மா ஒன்றே ஸத்தியம்.

85 கோடானுகோடி மந்திரங்களும், அவைகளை, முறையோடு கற்று, ஓதும் குருமார்களும், மனம் கவரும் நிலையில், இல்லவே இல்லை. மனம் மறைந்தான நிலையில், அதுவாகவே இருக்கிறார்கள்.

86 ஆறு துஷ்ட குணங்களும், மற்றும் அனேக, வக்ர குணங்களும், துவைதம், அத்வைதம் என்ற பேதங்களும், குண சொரூபங்களாக இல்லவே இல்லை. ஆனால், அதுவாக இருக்கிறார்கள்.

87 அறிவே வடிவான, ஆன்ம சொரூபமாகிய, எம்மிடமே, ஜகத் ஜீவ, ஈஸ்வராதிகள், தோன்றினார்கள். ஆனால் நாமரூபமாக ஜகத் ஜீவ, ஈஸ்வராதிகள், ஆன்மாவாகிய, எம்மிடம் இல்லை. நாமரூபத்தை, விட்ட நிலையில், அவர்கள், யாமாக இருக்கிறோம் அதுவாகவே யாம் இருக்கிறோம்.

88 நனவிலும், கனவிலும், எம் கற்பனை வழியில் தோன்றும், இந்த நாமரூப ஜகம், எம் ஆழ்ந்த உறக்கத்தில் இல்லை. ஆழ்ந்த உறக்கத்தில், கற்பனை செய்யும் மனமும் இல்லை. ஆகவே உலகமும் இல்லை. ஆகவே, என்றென்றும், எம் கற்பனை உலகம் பொய்யே! யாம் என்றென்றும் ஸத்தியமே!

89 முன்னே சொன்னபடி, எம் மனோ விருத்தியே, இந்த நாமரூப, ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளாகும். மனோ விருத்தி, ஒடுங்கி, அடங்கி, அழிந்து, மனம் மறைந்தான நிலையில், மேலே கூறிய, அனைத்தும் பொய்யே! கற்பனை கடந்த, காலாதீதமான, அதுவே யாம். யாமே அது!



**90** எம் மல உடலுக்குள், இருக்கும் ஆகாயமும், பரந்து விரிந்த ஆகாயமும், ஒன்றே! இங்கு இந்த, மல உடலே உபாதை அது நாமரூபமாகும். அவ்வுடல, நாமரூபத்தை நீக்கி, மண்ணாகிய, பரமாக ஆக்கி விட்டால், ஆகாயம் ஒன்றே! அதே போல், ஸித் சொரூபமாகிய, யாமும் அதுவும் ஒன்றே,

**91** சிவோஹம் = சிவம் + அகம் = சிவோஹம்! சிவமே நாம் என, பொருள்படும்! பரமாத்ம சொரூபமும், ஜீவாத்ம சொரூபமும், நம் உபாதைகளை, நீக்கிவிட்டால், அஸிபத சொரூபமாகிய, பரம் பொருளும், ஒன்றுகிவிடும்! பேதம் களைந்தால், நாம் அதுவே!

**92** கற்பன சொரூபமான, தற்பத வட்சிய பரமாத்மாவும்; த்வம்பத வட்சிய ஜீவாத்மாவும்; அஸிபத வட்சிய பரம்பொருளும்; தம்முடைய பேதமான, பதவட்சியங்களை, இழந்து விட்டால் பதவட்சியம் அற்ற, பரம் பொருளாகவே இருக்கும்! அதுவே நாமென, அனுபவம் கூட்டுவாயாக!

**93** கண்களால் காணும், அனைத்து நாமரூப, ஜகத் ஜீவர்களையும்; அவர்களின் வார்த்தைகளையும்; இவை அனைத்திலும், தோற்றும் பேதா பேதங்களையும்; மூலத்தோடு கெடுத்து, அனைத்தும் ஒன்றே! ஒன்றே அனைத்தும்! நானும் அந்த ஒன்றே என, ஐக்கியமாக்கி, சமுத்திரத்தின் உப்புப் பதுமை யென, கலந்து கரைந்து, மெய்மாகி விடு!

**94** மனதிற்கு, அதீதமானது அதுவே! மாயை மற்றும், மனத்திற்கும், அதீதமானது அதுவே! ஜாக்ர, ஸ்வப்ன, சுஷுப்திக்கும், அதீதமானது அதுவே, அனைத்து அண்டபிண்ட, பிரம்மாண்டங்களுக்கும், அதீதமானது அதுவே! அதற்கு, அதீதம் எதுவும் இல்லை! அதுவே நாம் என உணர்க!



95 உ

ஆகாயம் இல்லாமல், மேகம் சஞ்சாரம், செய்ய முடியாது. இருக்கவும் முடியாது. அதைப் போல, பிரம்மம் இல்லாமல், நாமரூப, ஜகத் ஜீவர்கள், இருக்கவும், இயங்கவும் முடியாது. பிரம்மமாகிய, ஸித்தின் இயக்கமே சித்தம்! சித்தத்தின் இயக்கமே, நாமரூப, ஜகத் ஜீவ, தோற்றமாகும்! ஆகவே, அதுவே நாம், நாமே அது, என உணர்வாயாக.

96 நாம் நாமாய், ஒரே வடிவான, பிரம்மமானது, ஸித்தாகிய, சித்தத்தை வைத்து நாமரூப, ஜகத் ஜீவ, தோற்றத்தை, உண்டுபண்ணி, தம் நிழலாகிய, மாயமனதை வைத்து, விளையாடிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அது நாமே, நாமே அது, என பயத்தை நீக்குக!

97 அகம் பிரம்மம். பிரம்மம் அகம் (நாமே அது. அதுவே நாம்) என்ற பிரம்மான்ம பாவனையால் மனதின், மோஹம்! ஒழிச்சு! (சந்தேகம்) வல்வினை தொல்வினை! (ஆகாமியம்) சந்தேக கலக்கம், அனைத்தும் நசிக்கும்!

98 வேத வேதாந்த சாஸ்திரங்களை, சிரத்தையாக படித்தாலும், கேட்டாலும், ஸ்ரீ பகவான் கருணை, பெறவில்லையானால், அத்வைதம் நிலை பெறாது. த்வைதம் தொலையாது. இது பிரமாண உண்மையாகும். இது இந்த ஏழை, பைத்தியத்தின், ஸ்வய அனுபவமாகும்!

99 இதுவரை கூறிய, பிரம்மான்ம பாவனையில் மனம் கரைந்து கலந்து விட்டால் அதாவது, நாமரூப, ஜகத் ஜீவ தோற்றமும், பஞ்சபூத உடலும், நாமரூபத்தால், விளங்கவில்லையென்றும், அந்த ஒன்றுவேயே, விளங்குகின்றன, துலங்குகின்றன என, உண்மையாக உணர்ந்து விட்டால், தூங்குபவன், கையில் உள்ள, அழகான மலரானது, அவன் கையை விட்டு, எந்த பிரயத்தனமும் இல்லாமல், நழுவி விடுமோ, அப்படி இந்த நாமரூப, ஜகத் ஜீவ தோற்றம் அனைத்தும், அவன் மட்டில் விலகி விடும்!



உ

(100) மேலே கூறிய, பிரம்மான்ம பாவனையை, ஸ்ரீபகவான்
கருணையினால், ஏற்றுக் கொண்டு, ஸ்ரீ ஸத்குரு திருவை
யினால், சிரத்தா வைராக்கியத்தால், அனுபவித்தால்
அதாவது நாமரூப, ஜகத் ஜீவ, தோற்றங்கள் அனைத்தும்,
அந்த ஒன்றின், தோற்றமென்றும், அந்த ஒன்றின் இயக்
கம் என்றும், அது இல்லாமல், இவைகள் இல்லையென்
றும், ஸ்வயமாகவே உணர்ந்தால், மரத்தில் பழுத்த பழ
மானது, எப்படி மரத்தை விட்டு தானே இறங்கிவிடுமோ
அதே போல், உன்மனதை விட்டு, இவ்வுலகம், அகன்று விடும்!

இந்த 100 வது பாடலுக்கு ஓர் சிறிய விளக்கம்!

மரத்திலோ, கொடியிலோ, பழுத்த ஓர் பழமானது, கனிந்தவுடன், மரம் அல்லது, கொடியை விட்டு "தானே" விலகுகிறதா? அல்லது மரம் அல்லது கொடி, அப்பழத்தை "தானாகவே"! விலக்கி விடுகிறதா என, உற்றுணர்ந்து கவனித்தால் ஓர் உண்மை வெளிப்படும்!

(1) மரம் அல்லது கொடி, நாமரூப ஜகத்தாகும்!

(2) அவைகளில், பூ, பிஞ்சு, காய், முதிர்ச்சி, பழம், கனிந்த நிலை, ஓர் சாதகனாகும்!

(3) இச்சாதகன், மேலே கூறிய, ஆறு நிலைகளையும், மரம் அல்லது, கொடியென்ற, நாமரூப, ஜகத்திடம்தான், பெறமுடியும்! பெற வேண்டும்! வேறுமார்க்கம் இல்லை.

(4) மரம் அல்லது கொடி, ஸ்ரீ பகவானின், மாயா வடிவமாகும்!

(5) அவைகளின் (மரம், கொடி) போஷாக்கு, என்ற சக்தி,



உ

(உரமும் ஜலமும்) ஸ்ரீபகவானின், மாயாவின் செயலாகும்!

(6) ஓர் அஞ்ஞானி, (பாமரன்) பழம் ஆகும்போது, அம்மரம், கொடிகளினால், பெறும் உரத்தையும், ஜலத்தையும், அம் "மரம் கொடிகளுடையது", என, உணராமல், அறியாமையினால் "நான்/எனது"/ என ஏற்றுக்கொள்வதால், வினை (புண்ணிய பாபம்) கடினமாகி, ஜனனமரணத்திற்கு, உரியதாக்கிக் கொள்கிறான்.

(7) ஓர் சாதகன், பழம் ஆகும்போது, அம்மரம் கொடிகளை, ஸ்ரீபகவானாகவும்; உரம் ஜலம் இவைகளை,

"எல்லாம் நீயே"/ என்றும்;

"எல்லாம் உன்னுடையதே"/ என்றும்; சர்வார்ப்பணத்தினால்,

விட்டுவிட்ட தன்மையினால், வினை (புண்ணிய பாபம்) கடினம் ஆகாமல், செயலிழந்து, வரவர மறைந்தே போய் விடுகிறது! ஆகவே ஜனன மரணம் இல்லை!

(8) பக்குவ ஆன்மாவாகிய, சாதனையாளன் என்ற பழுத்த (செயலற்ற) அந்த ஒன்று. (செயலுற்ற) ஸ்ரீபகவானை இருந்து, கண் காணிக்கிறான்.

(9) இச்சாதனையாளன், எல்லாம் நீயே! எல்லாம் உன்னுடையதே என்ற நிலையால், ஸ்ரீபகவானிடம், விட்டுவிட்டபடியால், அப்பழத்தை, காலமே பக்குவமாக, பார்த்துக் கொள்கிறான் ஸ்ரீபகவான்.



உ

அத்துடன், இச்சாதகனையாளன், எப்பவனும் கருதா தன்மையினால், ஓர் ஸத்குருவை காட்டுவான். அல்லது ஸத்குருவாய் வருவான். இது "பரகருணையாகும்"!

(10) ஸ்ரீ ஸத்குரு கிருபையும், உபதேசமும், பெற்ற தன்மையினால், இச்சாதகன், எல்லாம் ஒன்றே என்றும், நாமே அது! அதுவே நாம்! என்ற, பிரம்மான்ம பாவனை, பெற்று விடுகிறான்.

(11) பரகருணையினால், பரசொரூபமாகவே, வந்த ஸத்குரு, இச் சாதகன் என்ற, கொட்டையில் வாயழுத்தை, தாமே உண்டு, ஜீரணிப்பதற்கு, ஓர் "காயம்" கணிக்கிறார்!

(12) பரகருணையும், இறை கருணையும், இவ்விரு ஒன்றுக இணைகிறது. ஸ்ரீ பகவான், இறை கருணையாகும்! ஸ்ரீ ஸத்குரு பரகருணை யாகும்! ஆகவே காயம் கணிப்பது ஸ்ரீ பகவானாகும்! பழுத்ததை உண்பது, ஸ்ரீ ஸத்குருவாகும்!

(13) மரம் அல்லது கொடியில், பழுத்த இப்பழமானது, "விரக்தி" (வெறுப்பு) உண்டாகவில்லை. இது "போகம்" என "நிறைவை" பெற்றுக் கொண்ட தன்மையால், அம்மரமோ, அக்கொடியோ, எங்களைப் போன்று, வேறொரு "நாமரூபத்தை" பெறுவதும்; உண்டாக்காமலும்; எங்களுக்கு



உ

"உபகாரம்" ஆகாமல் போனதால், இனி நீ தேவையில்லையென, அம்மரமோ, அக்கொடியோ, "அப்பழத்தை" விட்டு விட்டது என, ஓர் நிலையிலும்???

(14) மற்றோர் நிலையில், இந்த சாதகன், பூர்வ புண்ணியமும், ஸ்ரீபகவான் கிருபையும், ஸ்ரீ ஸத்குரு கருணையும்; இவன் "சிரத்தா வைராக்கியமும்"! இணைந்த தன்மையினால், நாமரூப, ஜகத் ஜீவ கலக்கமும்! ஈஸ்வராதிகளின் மயக்கமும்! "இனி போதும்" என, நிறைவு செய்து கொண்ட தன்மையினால், தாந்தாமே தனித்த நிலையில், விலகிக் கொண்டான், எனவும் சொல்லலாம்!!!

மரம் அல்லது, கொடி விட்டதா? பழம் விட்டதா என பார்த்தால், இவைகள் தோன்றவும் இல்லை! பந்தப்படவும் இல்லை! விட்டு விலகவும் இல்லை! இவை அனைத்தும் பொய்யே! அந்த ஒன்றே ஸத்தியம்! அதுவே யாம், யாமே அது!!!



உ

100 வது பாடலுக்கு, சுருக்கமான விளக்கம்!
நாமரூப ஜகத்தாதிகளை, உண்டு உண்டு,
கழித்தது போதும் என்றும்; ஈஸ்வராதிகளை,
கண்டுகண்டு, களித்தது போதும், போதும் என,
தன்னில் தானே, நிறைவும் நிலையும் பெற்ற,
தன்மையினால், ஒருகணத்தில் மரமும், மழுவும்,
(உலகமும் சாதகனும்) ஒன்றை ஒன்று, விட்டுவிட்டனர்.

101 பூஜை, புனஸ்காரம், அபிஷேகம், அலங்காரம்,
ஆராதனை, ஆரத்தி, நிவேதனம், நித்திய
கர்மானுஷ்டானம். இவை அனைத்தும், நாமரூப,
தோற்றத்தினால் வந்த மாயாமனக் கற்பனைகளாகும்!
மேலே கூறிய, இவை அனைத்தும், அந்த ஒன்றின், பிரதிபிம்
பங்களே என்றும்; இவை அனைத்தும், அதனிடம் நாமரூப தோற்ற
மாக இல்லை, யென்பதே ஸத்தியம்!

102 நாமரூப ஜீவ, தோற்றம் அனைத்தும், உபாதைகளோடு
கூடியதாகும். ஆனால் அந்த ஒன்றே, எந்த
உபாதைகளும், இல்லாததாகும். அதுவே எங்குமாய்,
ஏகமாய் பரந்து விரிந்து, ஆனந்தமயமாகவே இருக்கிறது.
அதுவே நாம்! நாமே அது! என அசைவற்றிருப்பாயாக.



**103** உ ஓம்

அண்டபிண்ட பிரம்மாண்ட அனைத்து
கோள்களும். அனைத்து ஜீவ கோடிகளும்,
நாமரூபங்களாகவும். அதன் இயக்கங்
களாகவும் இல்லை. அந்த ஒன்றுதவே இருக்கிறது.
இது நான்குயுக, ஸ்ரீ மஹான்களின் அனுப
வமாகவும். எம் ஸ்ரீ குருதேவரின், அனுபவ
உபதேசவாக்காகவும் இருக்கிறது.

**104** நாமரூபம் அனைத்தும், நாமே அல்லாமல்,
நாமல்லவேகமாக, அவைகள் இல்லவே இல்லை!
நாம் ஆனந்த சொரூபமே! நம்மை, நாமரூபமாக
காண்பதோ, பேசுவதோ, துக்கமயமாகும். உன்னுடைய
க்ஷேமத்தின் பொருட்டு இதை சொல்கிறோம்.
க்ஷேமம் :- நாமரூபமாக, கண்டதும், கேட்டதும், பேசியதும்
நான்எனதுஎன, அனுபவித்ததும் பட்ட துன்பம் எல்லாம்
போதும், போதும், போதும், என்றுகிவிட்டபடியால்,
யாம் ஆத்மானந்த சொரூபமே என, உணர்வுபூர்வமாக,
அதுவாகவே இருந்து, ஆனந்திப்பதே க்ஷேமமாகும்.
ஆகவே, நாமரூப, ஜகத் ஜீவஸ் வரூபங்களை, விட்டொழித்து,
சந்தேக கலக்க பயமின்றி, நாம் அதுவே. அதுவே நாம்!
என்றுபிரம்மானந்த கடலில், மூழ்கி கலந்து கரைந்து,
விடுவாயாக. இது எம் ஸத்குருமேல் ஆணை.

**105** உன்னில் நீ, நிலைத்திருப்பதுவே பிரம்மானந்
தமாகும். உனக்கு அன்னியமாக, நீ எதை கண்
டாலும், கேட்டாலும், பேசினாலும், அவை துக்கமயமே!
இனி கடல் அலை போல், உன் மனதை சலிக்க விடாதே!
நிஸ்தரங்க சமுத்திரம் (அலையற்ற சமுத்திரம்)
போல், அந்த ஒன்றே நாம். நாமே அது என அசைவற்றிருப்
பாயாக! இங்கும், அங்கும், எங்கும், முக்காலமும், எக்கால
மும், உனக்கு அன்னியமாய், எவையும் இல்லவே இல்லை!
தன்னில் தான்தானாய், தனித்திருப்பதுவே பிரம்மானந்தம்!
உனக்கு அன்னியமாய், திரிகர்த்தாக்கள் தோற்றினாலும்,
அவை மருட்சியையும், பயத்தையும், கொடுக்கும்.



**106** உ

உன்னில் நீ, நிலை பெற்று நிலைத்து நின்று, ஆனந்தம், பெற வேண்டுமானால், உனக்கு, அன்னியமாக தோன்றும், அனைத்து ஜகத் ஜீவ ஈஸ்வராதி, நாம ரூப, இயக்கம் அனைத்தும்; கட்டையில் வந்த கள்வன் என, மதித்து, கட்டை (உபயோகமற்றது) பரமாகவும்! கள்வன் நாம ரூப, ஜகத் ஜீவ, தோற்றங்களாகவும் மதித்து, இவை அனைத்தும், மாயாமன, பிராந்தி மயக்கமேயன்றி, உண்மையல்ல! உண்மை, அந்த ஒன்றே ஸத்தியம். நாம் அதுவே, அதுவே நாம்! என ஆனந்தமாக, ஸ்வயமாக இருப்பாயாக!

**107** மேலே கூறிய, அசைவற்ற நிலையைப் பெறுவதே, அகண்டானந்தமாகும்! அதுவே, ஆத்ம சாக்ஷாத்காரமாகும்! அதுவே பரப்பிரம்மானந்த, சகஜ நிலையாகும்! அதுவே உன் பிறவிப் பயனாகும்! அதுவே நீ செய்ய வேண்டியதை, செய்ததாகும்! மேலே, இதுவரை நூற்றி ஆறிலும் கூறிய, உள் ஒளி பொருந்திய, மாணிக்கங்களாக, சுவைத்து சுவைத்து சுவைத்து, சுவைத்து, அனுபவித்தாயானால், எந்த பயிற்சியும், முயற்சியும், கடின சாதனையும், இனி செய்யாமல் இருக்கும்

"ஸகஜானந்த ஆத்மானுபூதி"

பெற்ற நிலையாகும். இந்த நிலையானது, பழங்கால மாய மந்திரம் போலும்! கலிகால கம்ப்யூட்டர் இயக்கம் போலும்! உடனடியாக, தோற்றும் நிலையும் அல்ல! பசியும், உணவும்! உணவும், பசியும்! மாறி மாறி வந்து இன்ப துன்பம் என கொடுக்கும் நிலையும் அல்ல!



உ

10 பைசா போட்டவுடன், உங்கள் எடையும் அதிர்ஷ்டமும், தரும் கலி கோலமுமல்ல! ஒரு மாங்கொட்டையை போட்டு, மறு கணம் ஓர் மா செடியை, வரவழைக்கும் செப்படி வித்தையும் அல்ல! அஷ்ட சித்திகளாலும், ஐஸ்வராதிகளுக்கும், அதீதமாக, கோடானு கோடி அண்டங்களை, உண்டாக்கவும், அடுத்த க்ஷணம், அழிக்கவும் செய்யும் மஹா சக்திகளாலும், இந்த ஆத்மானுபூதியை, காட்டவோ செய்யவோ, உணரவோ, உணர்த்தவோ முடியாது!

"அணு அணுவாகவும்"! "அதாவது "படிப்படியாகவும்"! தோற்றமில் தோற்றும், "பயிர்" வளர்வதைப் போல் வளர்ச்சியை உடையதாகும்!

எள்ளளவும் உள்ளத்தில் ஏறிக்குறையான்காண்

என்ற ஸ்ரீமஹான்கள், வாக்குப்படி, ஸ்ரீ பகவான் கருணையும், ஸ்ரீபர கருணையும், இணைந்து செயல்படுவதால், இந்நிலையை "அவரவர் ஸத்குருவே" உணர்வர். மற்றும், திரிகர்த்தாக்களும் உணரார்! சாமான்யரும் உணரார். இச்சாதகனுக்கு, அவன் அனுபவத்திலேயே, கொடூர குணங்கள் வரவர குறையும்! ஆசாபாசங்கள் வரவர மறையும்! அமைதி வரவர நிறையும்! முதலில் நாமரூப இயக்கங்கள், அவனை விட்டுவிட்டு வரும், பின் வரவர, நாமரூப இயக்கங்கள், பொம்மலாட்டமாகமாறும்! ஆனந்தம், அணு அணுவாக கூடி கூடி, நிறைந்து ஆனந்தம் விலகாமல் இருக்கும். இங்கு வரவர "வாக்கு" குறையும்! "ஆனந்தம்" நிறையும்!!



108. உ

இக்கலியுகத்தில், அஹங்காரம், அதிகாரம், ஆதிக்கம், இவைகளால், உந்தப்பட்டு, உரிமையோடு உடைமைகளை, என்னுடையது என, பாராட்டுவதிலும், போட்டி பொறாமை, நிறைந்த மனதுடையவர்களாய், படிப்பினால் பெறும், அந்தஸ்து, கௌரவம், பட்டம், பதவி, இவைகளின் மோஹத்தினால், அரசியல் சாக்கடையையும் (பண வெறியும்) சினிமா மோஹத்தையும் (காதல், காம வெறியையும்) இவைகளையே, சுகம் என நம்பி நம்பி அதையே, வாழ்க்கையாக கொண்டாடும், இக்கலியுகமாந்தர்களிடம், ஒழுக்கம் கெட்டுப் போன தன்மையினால், வேத வேதாந்த சாஸ்திரங்கள், அனைத்தும், வியாபாரமும், விளம்பரமும், ஆடம்பரமும், என ஆகிவிட்டது. ஆகவே இந்த அத்வைதமானது, வியாபாரம் (எதிர்பார்ப்பு) விளம்பரம் (பேர் புகழ் பட்டம் பதவி) என, மாறி அமைந்துவிட்டது.

பொறுமை, எளிமை, இனிமை, ஓர்மை, நம்பிக்கை இவைகளால், அடையும் இந்த அத்வைதம், பொறாமை, பகட்டு, வறட்சி, பன்மை, சந்தேகம், இவைகளால் பீடிக்கப்பட்டு, மதம், இனம், மொழி, நாடு, என விகாரம் அடைந்து, கோரமான துவைதமே, இன்று அத்வைதம் என, பேசப்படுகிறது. பாடமும், நடத்தப்படுகிறது. அத்வைத முடிவான, ஜீவன் முக்திக்கு மதிப்பெண் இதிலும் தரப்படுகிறது.

சில மாதங்களுக்குமுன், வெளிவந்த இதழில், கூறியபடி, 48 ஆயிரம் மஹரிஷிகளில், பாதிக்குமேல், இக்கலியில் குருமார்களாக, தோன்றியிருப்பதால், பக்தியைப் போலும். அத்வைத ஞானத்தைப் போலும், வியாபார, விளம்பர நிலையில், போதிக்கப்பட்டு வருவதால்,



ஸத்சிஷ்யர்களையும், ஸத்குருவையும்,
காண்பது, மிக, மிக, மிக, மிக, மிக,
அரிதாக இருக்கிறது.

மேலும் இக்கலியுகத்தில்,
பிரவர்த்தி மார்க்கமே வலியுறுத்தப்
படுகிறது. நிவர்த்தி மார்க்கத்திற்கு, வழிகாட்டிகளே,
இல்லாமல் போய்விட்டது. அதன் காரணம்?
எம்தாயுமானவர் தம்முடைய பராபரக்கண்ணியில்
அன்பர் பணிக்கு எம்மை ஆளாக்கி விட்டால்,
இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே/ என்றார்.

அது இக்கலியில், எப்படி மாற்றப்பட்டுவிட்டதென்றால்?
மக்கள் சேவையே, மகேசன் சேவை யென,
ஆக்கப்பட்டுவிட்டது.
முந்தையது நிவர்த்திமார்க்கம்/ பிந்தையது பிரவர்த்தி மார்க்கம்/
முந்தையது ஜீவன் முக்தி/ பிந்தையது ஜனன மரண சுபம்/

இக்கலியுகத்தில் எவரும், ஆத்மபலத்தை விரும்புவதில்லை.
,, ,, அனைவரும், பணபலம்/ படை
பலம்/ பக்தபலம்/ உறவு சுற்ற நட்பு பலம்/
ஆகியவற்றையே, நாடுகின்றனர்? தேடுகின்றனர்?
ஓடி ஆடி தேடி, நிலை தடுமாறி பாதாளத்தில்
வீழ்கின்றனர். அல்லது ஏதாவது, ஒருபலன் கருதி
(வியாபாரத்தில்) கண்கெட்டமாடு போல், அலைகின்
றனர். ஆலயங்களிலும், வீட்டு பூஜைகளிலும்,
தீர்த்தம், மூர்த்தி, ஸ்தலம் என, அவை எல்லாம்
வியாபார (பலன் கருதும்) நோக்கமே/ இவைகளை
ஆன்மபலம்/ ஆன்மசக்தி/ ஆன்மநேயம்/ யே,
என பேசிக்கொள்கின்றனர்.



"துறவு" என்றுவே, தன் பொறி புலன்களை கட்டி, இனி இந்த, உலக வாழ்க்கை போதும், என சந்நியாசம் ஏற்பது ஓர் வழியாகும்!

மற்றோர் வழி, எல்லாம் அவன் பொருள்! எல்லாம் அவன் செயல்! அவனன்றி அணுவும் அசையாது! என்ற நிலையில், சர்வார்ப்பணமாகவிடும்! நிலையாகும்! முந்தையது கட்டுதலாகும்! பிந்தையது விடுதல் ஆகும்! ஆனால் இன்றைய கலியுக துறவானது என்ன வேஷம் ஆகி விட்டது. ஆகவே இன்றைய கலியில் அத்வைதம் என்பது, வாய் ஞானமாகவே இருக்கிறது. அனுபவ ஞானம் என்பது, தன்னை மறைத்துக் கொண்டது என்று, சொல்வதை விட, மறந்து விட்டார்கள், என்றே சொல்லலாம்!

மேலும், இந்த ஸ்வய ஞான அனுபவ நூல் (ரிபுகீதையை) பெற்றவர்கள், பெரும் பாக்கிய சாலிகளே! ஆனால் இந்த, நூலாகிய கனியை, சுவைத்து உண்டால்தானே, ருசியும் பெறலாம்; அனுபவிக்கவும் செய்யலாம். சுவையின் முடிவில், ஹாரி துயில் கொள்ளலாம். அதுவே ஜீவன் முக்தியும் ஆகும்!

ஒரு பங்கு சுவைக்க முயலுங்கள்! "யாம்" "பரிபூரணமாக" உங்களுள், செலுத்தி நிறைவு செய்து விடுவோம். அந்த இறை கருணையும், குரு கருணையும், உங்களுக்குள்ளேயே இருக்கிறது! உங்களால் முடியும்! உங்களை முடிக்கவே யாம் வந்துள்ளோம்! இதுஸத்தியம்!
எல்லாம் ஒன்றே!
அது சிவமே!
அது யாமே! அது நீங்களே! இது ஸத்தியம்!

பாபா



உ

சில ஆண்டுகளுக்கு முன், மஹான் ஸ்ரீ வேத
வியாசர் அம்சமான, ஸ்ரீ ஜெய தேவ
ஸ்வாமிகளின் கருத்துக்களை,
ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகளின் தோற்றம்,
என ஒன்றில், அவன் அருளால், வெளி
யிட்டோம். அதிலிருந்து, இந்த நேரம்,
உங்கள் மனதுக்கு எது தெளிவை கொடுக்குமோ,
அதை மட்டும், இரண்டொரு வாசகம் தருகிறோம்!

"உணர்க" ---- "தெளிக" ---- "அதுஆகுக"!!!

வாஸிஷ்டத்தில், ஸ்ரீ வஸிஷ்டர் பிரானவர்,
ஸ்ரீ ராம பிரானுக்கு, சொல்லும்போது?
ஹே ராமா! ஓர் விவேகிக்கு, அதாவது, ஆத்ம ஞான,
வேட்கை உள்ள, ஒருவனுக்கு, முதலில் தேவை!!!

"தத்துவஞானம் வேண்டும்"!

தத்துவ ஞானத்தால், "வாசனக்ஷயம்"!
உண்டாகும்; அந்த வாசனக்ஷயம், உண்டானால் தான்,
"மனோநாசம்"! உண்டாகும்! மனோநாசம்,
(மனம் மஹத்தாகும் நிலை) பெற்றவன்றி ஓர் சாதகன்

"ஜீவன்முக்தி பெறமுடியாது"

என்று, கருத்தை வலியுறுத்தி, ஞான வேட்கை இல்லாதவனுக்கு
அஞ்ஞான வைராக்கியம் உள்ளவனுக்கு, ஞானம்
சாத்தியமாகாது என்றும். ஞான வைராக்கியம்!
அதாவது, "பூரண நிறைவு" உள்ளவனுக்கே,
ஞானம் சாத்தியம் ஆகும், எனவும் கூறுகிறார்.
இனி இவைகளின் விளக்கத்தை, சிரத்தையுடன் காண்க!



உ

விவேகம் என்பதே, வேகம் கெட்டு, சாம்பல் ஆனால்தான், கிடைக்கும் என்றார்கள். அனுபவ ஞானிகள். வேகம் கெடுப்பது என்றால், ஆத்திரம், அவசரம், படபடப்பு, இவைகள் நாசமாக வேண்டும். ஆனால் மேலே கூறிய, இந்த நான்குமே, "கலிதோஷ பிரவர்த்தி" ஆகும்! பிரவர்த்தி இருந்தால் மட்டும், இந்த நாமரூப, ஜகத் ஜீவர்களின், இயக்கம் நடைபெறும். இது கம்ப்யூட்டர், கால்குலேட்டர், என "அவசர யுக" காலம் ஆகும்! உடனே, முடிவு தெரியவில்லையானால், அது வாழ்க்கை இல்லை! அது தொழில் இல்லை! அது குடும்பம் இல்லை! யென அழிவுப்பாதையை நோக்கி, அதி வேகமாக, செல்லும். அல்லவ, அல்லவ, செலுத்தும் காலமாகிவிட்டது.

நிவர்த்தி இருந்தால், மட்டும், அந்த நாம ரூப, ஜகத் ஜீவர்களின், இருப்பும், அவைகளின் இயக்கமும், உணர்ந்து, அவைகளிலிருந்து நாம் "நீக்கம்" பெறவும் முடியும். அதுவே பிரமாண உண்மையாகும்! ஆகவேதான், ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான், தம்முடைய, "சிவபுராணம்" என்ற நூலில், கூறும்போது, "வேகம் கெடுத்தாண்ட" வேந்தன் (திரு) அடி வெல்க என்றார். அவர் இக்கலியுகத்திற்கு, ஏற்றபடி. வேகம் தடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க என பாடவில்லை. தடுத்தால், அது மீண்டும் மீண்டும் வரும்! கெடுத்தால், அது நாசமாகும் எனப் பொருள்பட, அப்படி வலியுறுத்தியிருக்கிறார்.



உ

(1) தத்துவ ஞானம்:— தத்துவம் என்பதை சற்று உள் உணர்ந்து நோக்கினால்? "தத்த்வம்" எனப் பொருள்படும். அதாவது, தத் பதம், எனச் சொல்லும், ஸ்ரீ பரமாத்ம சொரூபமும்! த்வம் பதம், எனச் சொல்லும், ஜீவாத்ம சொரூபமும்! ஒன்றாய் இணைந்து, கலந்து மயமாவதே "ஞானம்" எனப் பொருள்படும்!

இந்த மனம் படைத்த, இந்த மனிதனானவன், பொன், பொருள், போஹம், மோஹம், காமம், என விளக்கை, பழம் என, மயங்கி விழுந்து, கருதி சாம்பல் ஆகும் விட்டில் நிலைக்கு "வாழ்வு! வாழ்வு! வாழ்வு"!!! என்று எவரும் "மாள்வாரில்லை!"

இந்த நாம ரூப, ஜகப் பொருள்கள், அனைத்தும், ஸ்ரீ பகவானுடையதே! நாம் ஸ்ரீ பகவானின் குழந்தையே! நாம் இங்கு அவனால், அனுப்பப்பட்டு விளையாடவே வந்தோம் என, உணர்வால் உணர்ந்து நான், எனதை நீக்கி, எல்லாம் நீ! எல்லாம் உனதே, என ஆக்கி, எப்பிடிப்பும் இல்லாமல், நடிப்பில், மயங்காமல் விளையாடினால், விளையும் சேராது. மனமும் சோர்வும், அயர்வும் ஆகாது. அங்கு, "நாம் அவனாகி" விடுவோம். இது ஸத்தியம். நாம் அவனாகி விடுவோம் என்றால், ஸ்ரீ பகவான் வடிவம் பெறுவோம், என்ற கருத்தல்ல! நாம், ஸ்ரீ பகவானுடைய "புனிதத்தன்மையை" பெற்று விடுவோம்; என்பதே கருத்தாகும். இது இப்பைத்தியத்தின் அனுபவம்!



உ

தத்பதமாக இருக்கும், ஸ்ரீ பகவான்
என்ற பரமாத்மாவும், நாம் (த்வம்)
பதமாயிருக்கும், அறியாமையோடு,
இருந்த நாம், அறியாமை நீங்கிய
தன்மையினால், ஜீவாத்ம பாவனை நீங்கி
“அறிவு” சொரூபமாகி, “ஆத்மா”
என ஆகிவிடுவோம். தத்வ ஞானத்தின் பிரமுழக்கமே,
“நான்; எனது” முழுமையாக நீங்குக!
எல்லாம் “நீ; உனது” ஆக்குகவே யாகும்!

(2) வாஸனாக்ஷயம்:— மனம் என்றால் வாசனை.
வாசனை என்றால் குணம். க்ஷயம் என்றால் கெடுத்தல்.
அதாவது அழித்தல். அதாவது வாசனை என்ற குணங்
களை, முழுமையாக அழித்து, மனம் மறந்தாகுதல் ஆகும்
வாஸனாக்ஷயம் என்றால், “நாம, ரூப, குணம்,
குறியை” முழுமையாக கெடுத்தவாகும்!
மேலே கூறிய இந்த நான்குமே, “மனதின்” வடிவமாகும்.
முதலாவதாக கூறிய, நாமரூப ஜகத் ஜீவர்களை, ஸ்ரீபகவானு
டையதாகவே, உணரச் சொன்னோம். இங்கு இந்த நாம ரூபம்
அனைத்துமே, மனதின் கற்பனையாகும். இந்த நாமரூப
கற்பனையானது, இது இன்னது! இது இன்ன செய்யும்!
இது இப்படிப்பட்டது! என இன்னும், அனேக பிரிவுகளாக
பிரித்து, “இயக்கத்திற்கு” ஆதாரமாக
வும், ஆதரவாகவும், அவைகளுக்கு ஆகாரமாகவும்,
வகுத்து வகுத்து கொடுத்து, எழுச்சியையும்,
வீழ்ச்சியையும்,



உ

உண்டுபண்ணுவது, "குணதோஷங்களாகும்!" இக்குண தோஷங்களே, மனதின் வாசனையாகும்! இக்குணதோஷங்களைத் தெரிப்பதே, வாஸனைகளேயாகும்! இதில் ஓர் முக்கியமானதை, உணரவேண்டும்.

(1) நாமரூபம் என்பதே, அம்மனம் கொடுத்த பெயரும், அதற்குத் தகுந்த, உருவமும் ஆகும்!

(2) இதை உதாரணமாக, பொன்னான, ஆவரணங்கள் என, வைத்துக் கொள்வோம்! இவ்வாபரணங்கள் அனைத்தும், பொன்னுக்கு அன்னியமில்லை!

(3) பொன் என்றால், ஸ்ரீபகவான் என்ற, பரமாத்மா ஆவார். ஆவரணம் என்றால், அப்பொன்னில் உண்டான, "விதவிதமான நாமரூபம்" ஆகும்!

(4) இந்தமனமானது, பொன்னிடத்தில், விகாரமும் விவகாரமும் அடைவதில்லை. காரணம் அங்கு இருப்பது "பொன் ஒன்றே" (ஸ்ரீபகவான் ஒருவனே)

(5) இந்தமனமானது, ஆவரணங்களிடம், விகாரங்களும். விவகார பிரச்சினைகளையும். தமக்குத்தானே, உண்டுபண்ணிக் கொண்டு அதாவது பொன் (பணம்) பொருள், உறவு, சுற்றம், நட்பு, என பற்பல, நாமரூபங்களை கொடுத்து, "நான், எனது" என விகாரமும் விவகாரமும், அடைந்து, அதனால் புண்ணியம் பாபம் என, தேடிக்கொள்கிறது.

(6) இது ஸ்ரீபகவானின், குற்றம் இல்லவே இல்லை. இது இந்த மாயா மனதின், வாஸனையின் குற்றமாகும்!



இங்கும் இந்த மனமானது "நான், எனது" என அஹங்கரித்து, அபிமானிக்கவே "வாஸனா ஏற்றம்" உண்டாகிறது. இங்கு இந்த மனமானது "நான், எனது" என்ற அஹங்கார அபிமானங்களை, நாசம் செய்தாலே, அவஸ்யம் வாஸனாக்ஷயம் உண்டாகும்! ஆகவே, நான் எனதை நீக்கு! எல்லாம் நீ/உனது என ஆக்குக!

3 மனோநாசம்:- மேலே கூறிய, தத்துவ ஞானமும், வாஸனாக்ஷயமும், எந்த மட்டில், அனுபவம் பெறுகிறோமோ, அந்த மட்டில் "மனோலயம்" ஆகும். ஆனால் அங்கு "மனோநாசம்" ஆவதில்லை. இந்த மனோநாசம், ஆகவேண்டுமானால் முக்கியமாக ஒன்றை மட்டும் உணர வேண்டும்!

(1) நான், என்னுடையது இருந்தால், அஹங்கார, அபிமான, அதிகார, ஆதிக்க உடைமை, உரிமை, என்ற நிலையால், இக்கலிகோடி, "புண்ணியங்கள்" தேடிக் கொண்டு, பொன் பொருளிலும், பெண் இன்பங்களை அனுபவிக்கும் கோடீஸ்வரனும் "உயர்பிறவியை"யும், அடைந்து, புனரபி ஜனனம், புனரபி மரணம் என வாழ்க்கை சக்கரத்தில், சுழல்வாய்!

(2) நான் என்னுடையதை நீக்கி, ஸ்ரீபகவத் சொரூபத்தில் ஒன்றி, ஸ்ரீ பகவத் பிரேமையில் லயித்து, அவன் ரூபலாவண்யத்தையும், மஹிமைப் பிரபாவத்தையும், மயங்கி இருந்தால்,



"உயர்பிறவி" கிட்டாது! "புனிதமானபிறவி" கிட்டும்! சிறந்த பக்தனாகவே இருந்து, ஆடிப்பாடிக் கொண்டாடி, பரம "பதம்" எனச் சொல்லும், சொர்க்கம், கைலாயம், வைகுண்டம், பிரம்ம லோகம், மணிக்கிரீவம், முதலிய "பேரானந்த" தேவ தெய்வங்களோடு "போக்குவரவு" செய்யலாம். இவ்வாழ்க் கையில் "மனோ" சபலம் ஏற்பட்டு, சற்று "தவறினாலும்" புல்லாகி, பூண்டாகி, புழுவாகி, மரமாகி, பல்மிருகமாக, பறவையாய், பாம்பாகி, மனிதனாய், தேவனாய், வல்அசுரனாகி, பேயாய், கணங்களாய், தாவர சங்கமமாகி இவை தேவையில்லை? என, ஜனனம் எடுக்க வேண்டிவரும். இது ஸ்ரீ மஹான்களின் அனுபவ வாக்காகும்! ஏன் இவைகள் ஏற்படுகிறது என்றால்? "மனோநாசம்" ஆகாமல், ஜீவன் முக்தியென்ற பிறவா நிலையை பெற முடியாது! இந்த மனோ நாசம் ஆக வேண்டுமானால் "நான், எனது" நீக்கி, ஸ்ரீ பகவத் சொரூபமாக ஆக வேண்டும்! இதனால் மனம், அமைதியும், சாந்தியும் பெறும்! இதனால் நாம ரூப ஜகமயக்கமாகிய "ஆவரண மோஹம்" அவஸ்யம் நாசமாகும்! இதனால் குடும்பம், தொழில், பணம், உறவு, நட்பு ஆகிய அனைத்திலும், "பிடிப்பு" தானே விட்டு "போகும்" என்ற நிறைவு உண்டாகும்.



நாமரூப, ஜக ஜீவ மயக்கமாகிய,
ஆவரண மோஹம், ஒழிய வேண்டுமானால்,
ஜக மயக்கமாகிய, ஆவரணங்களின்,
நாமரூபம், நாமும் அல்ல! நம்முடையதும்
அல்ல! "பொன்னாகிய"
ஸ்ரீ பகவத் சொரூபமே நாம்! என உணர வேண்டும்!
பொன்னாகிய நாமே, ஓர் களிம்பும் (மாயாவும்)
அதன் செயலும் (மனமும்) இணைந்து, நாம
ரூப தற்பனை செய்து, "நான், எனது" என விளை
யாடிக் கொண்டிருந்தோம். அவ் விளையாட்டில், போதும்
என நிறைவு கொண்டோம். நான் எனதை விட்டோம்!
விளையாட்டும், போதும் என, நிறைவு பெற்றது. ஆகவே,
பொன் (ஸ்ரீ பகவான்) என ஆகிக் கொண்டோம்.
அந்த பொன்னும் (ஸ்ரீ பகவத் சொரூபமும்) மாயாவை
வைத்து, விளையாடும் ஓர் விளையாட்டே என, எம்
"அறிவால்" உணர்ந்தோம்.
"மன" விளையாட்டு "ஜீவ" சொரூபமென்றும்;
"மாயா" விளையாட்டு "ஸ்ரீ பகவத்" சொரூபம்
என்றும், தெளிந்த தன்மையினால், அவ்விரண்டையும்,
விட்டு விட்டு, எம் யதார்த்த சொரூபமாகியும்;
எம் பூரண சொரூபமாயும், எம் காலாதீத சொரூபமாயும்,
எம் பிரம்மானந்த சொரூபமாயும், எம் அத்வை
தானந்த சொரூபமாயும், எமக்கு அன்னியம்,
எவையும் இல்லாத சொரூபமாயும்; "யாம்"



உ

"யாமென" சொரூபமாயும்!
உள்ள மண்ணே (பரமே)
யாம் என, உணர்ந்து யாமே அது!
அதுவே யாம்! என சும்மாவே சுகமாக
வே, இருக்கிறோம் என "அறிவாய்"
உணர்ந்து, அதுவாக இருப்பதுவே மனோநாசமான,
நிலையாகும்! ஆகவே?
"தத்துவஞானம்" சாத்தியமாகாமல்,
"வாஸனக்ஷயம்" கிட்டாது என்றும்,
வாஸனைக்ஷயம் கிட்டாமல், "மனோநாசம்"
ஆகாதென்பதும், ஸ்ரீமஹான்களின் அனுபவ வாசகம்
ஆகும். இவை மூன்றும், சாத்தியமாக வேண்டுமென்
றால், குறிப்பாக, "வைராக்யம்"!
வேண்டுமென்பார்கள், ஸ்ரீமஹான்கள். இந்த வைராக்
கியம் என்பது, வெறுப்பல்ல! அது வேண்டாம் என்ற
நிக்ரஹம் அல்ல! ஓர் "லக்ஷியம்!"
அதாவது ஓர் குறிக்கோள் வேண்டும். அதில்
அசையாமல், கடைப்பிடிப்பது "நம்பிக்கை"
ஆகும். இந்த நம்பிக்கையையே, வைராக்கியம் என
சொல்லப்படுகிறது. அதாவது "நம்புவது" உன்
"பண்ணணி" ஆகும்! அது செயல்படுவதுதான்!
"கைகொடுப்பது அது" ஆகிய அவன் கடமை ஆகும்.



# அஞ்ஞான வைராக்கியம்!

(1) ஓர் பிணத்தை, சுமந்து செல்லும் போது. என்ன உலகம்? மாயா உலகம்? மாயா வாழ்க்கை? அத்தனையும் பொய்? என இன்னமும், பற்பலவாக, கற்பனை கொண்டு, உலகையும், பொருள்களையும், வாழ்க்கையையும், வெறுத்துப் பேசி, பக்தி பண்ண வேண்டும்! ஞானம் தேட வேண்டும் என எண்ணுவது, "மயான" வைராக்கியமாகும்!

(2) ஓர் குழந்தையை, பெற்றெடுக்கும் போது மட்டும், அந்த "கஷ்டம்" தாளாமல், இனி கணவனிடமே, போகக்கூடாது என்று வைராக்கியம் பூணுவது போல், குடும்ப கஷ்ட நஷ்டம், துக்கம் துயரம், விபத்து ஆபத்து, இம்சை கடும் இழப்பு, ஏற்படும் போது மட்டும் என்ன உலகம்? இது மாயா உலகம்? இது மாயா வாழ்க்கை? அத்தனையும் சுத்தப் பொய்? இனி இவ்வாழ்க்கை தேவையில்லையென, வீட்டை விட்டு ஓடி, காவி அணிந்து கொண்டு, சாமியாராக, (சாமியார்? என்ற கேள்விக்குறியாக) போவது, "பிரசவ" வைராக்கியம்!

(3) குடும்ப விரோத குரோதத்தால், அடித்து கலகம் பண்ணியோ, வெட்டி கொலைகள் செய்தோ? அடாத காரியங்கள் பலப்பல செய்து, அதனால் வெறுப்பும், பயமும் உண்டாகி, வீட்டை விட்டு, வெளியேறி, காவி அணிந்து, மேலே கூறிய சாமியாராய் போவது, "மேட" வைராக்கியம்!

(4) புராணம், இதிகாசம், படிக்கும் போதும். பஜனை, பூஜை இவைகள் "பிரசங்க" (ஊர் உலகம் புகழும் படியாய்) செய்யும் போதும், "வாய்" ஞானம் பேசிக் கொண்டு, அப்படி இருக்க வேண்டும்! இப்படி நடக்க வேண்டும்!



உ

ஸத்தியமே பேசவேண்டும்! அஸத்தியம் பேசலாகாது! ஸன்மார்க்கத்தில் நடக்க வேண்டும்! ஜக மார்க்கம் கூடவே கூடாதென, இன்னும் பலபல விதமாக, "ஊருக்கு" உபதேசம், செய்து கொண்டு, காவி அணிந்து சாமியார்? என்று போவது "புராண" (பொய்யான) வைராக்கியமாகும்!

(5) சிவனே பர தெய்வம் என்றும், விஷ்ணுவே பர தெய்வம் என்றும், அம்பாளே பர தெய்வம் என்றும், பலபல நிலையில், "மூர்த்தி வேஷம்" கொண்டு, "மத குரு மார்களை" நம்பி, கடும் விரதம் ஏற்றுகளும், சாதனை செய்வது, "மத" (வெறி) வைராக்கியமாகும்!

இப்படியாக இன்னமும், அனேக வைராக்கியங்கள் இருக்கின்றன. இவை அனைத்தும், "அஞ்ஞான" (அறியாமையின்) வைராக்கியங்கள் ஆகும். இவைகளினால், கர்மாக்கள் பெருகுமேயன்றி, கர்மா நிவர்த்தியும், ஜீவன் முக்தியும், ஒருகாலும் கிடையாது.

## "ஞான வைராக்கியம்"!

ஞான வைராக்கியங்கள் சில உண்டு! அவையாவன

(1) "நான்! என்னுடையது" என்ற, அஹங்கார அபிமானங்களை, முழுமையாக கெடுப்பதே, ஞானம் ஆகும். ஞானம் இல்லாத வைராக்கியம், வைராக்கியம் ஆகாது. மேலே கூறிய, அஹங்கார மமகாரங்களை, முழுமையாக கெடுத்து, விசார ஞானத்தால்



அகிலமாகிய, புழு பூச்சி முதல் கொண்டு, அண்ட பிண்ட, பிரம்மாண்டம் வரை, பிரம்மமே நிறைந்திருக்கிறது. அந்த பரிபூரணமான, பிரம்மத்திற்கு, நாம் அன்னியமில்லை! நாமே அது! அதுவே நாம்! நாம் நம், மனோ பந்தத்தினால், "ஜீவன்" என ஆனோம்! இப்பந்த நிவர்த்தியானால், நாம் "ஆத்மா" என ஆவோம்! நாமும், பரமாத்மாவும், ஒன்றே! பரமாத்மாவும், ஆத்மாவாகிய நாமும், தாவரந்த "பரசொரூபமே" என, நம்பிக்கையின், வைராக்கியத்தினால், மன "கற்பனைகளை" தெறுத்து, பூரணமாகவே இருப்பது, "பூரண" வைராக்கியம் ஆகும்!

(2) கானல் ஜலம் போல், தோன்றும் அந்த, நாம ரூப "பொருள்களை மறந்து" "ஸ்திரீயாதி காம போகங்களை" காகத்தின், எச்சத்தைப் போல், "உதறி" தள்ளி, காமக் குரோதாதி { காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், சந்தேகம் } ஆகிய அறுவரையும், அடியோடு நாசம் செய்து, குடும்பத்தை, "நான்" காப்பாற்ற வேண்டும் என்றும், "என்" குடும்பம் "என்னால்" தான் நடைபெறுகிறது என்றும், இவை அனைத்தும், "என்னுடையது" என்றும், தோன்றும், மனமய, "மோஹ" எண்ணங்களை, முழுமையாக கெடுத்து,



உ

இவ்வுலகைப் பொறுத்த வரை,
"அவனன்றி அணுவும் அசையாது"
ஆனால், "செயல்படும் அனைத்தும்
செயல்படா அதுவும்",
"நாமும்" ஒன்றாகிய, அப்பரப்பிரம்மமே என்று,
திட உணர்வோடு இருப்பது "ஏகாந்த" வைராக்கியம் ஆகும்!

(3) ஸத்குருநாதனிடம், அதீத பிரீதி உடையவனாய்,
"ப்ரேமையாய்" கிடைக்கும்,
"சேவையும்" (ஏதேனும் ஓர், அணுப்பிரமாண வஸ்துவை, அவர் ஏற்றுக் கொண்டாலும், அது சேவையாகும்)
அவர் "வாக்கிய ஸ்ரத்தையும்" கொண்டு,
தேகாத்ம புத்தியை, (நான் சரீரம் என்ற புத்தியை) முழுமையாக தொலைத்து, மானவமானம், முழுமையாக நாசம் செய்து,
அதுவே நாம்! நாமே அது! என்ற பிரம்மாண்ம பாவனையோடு
அனைத்து ஜீவ கோடிகளுக்கும்
இருப்பது "ஸ்வபாவ ஸாக்ஷி"யாய் வைராக்கியம் ஆகும்!

(4) புண்ணிய பாப, கர்ம சம்பந்தம் கொண்ட இந்த உடலானது,
மமதைமய, குண தோஷங்களால், மாயாவின் இயக்கத்தினால்,
பாரபக்ஷ தோஷம் இல்லாமல், விதிநாச் சாரப்படி, திட்ட
மிட்டகாரியங்கள், "ஒழுங்காக" நடைபெறுகிறது.
யாமோ ஆனந்தமயமான, ஆத்மசொரூபமாகும் என்ற திட
"உணர்வில்!" இருந்து கொண்டு, இயல்பாக
நடைபெறும், தேக போஷணையையும், கவனிக்காமல்,
சோர்ந்து



"விதிநிஷேதங்கள்" (கட்டுப்பாடுகள்) "தள்ளி"!
வினை வசத்தால், தூலவத்திற்கு
வரும் இன்ப துன்பங்களை, "சமமாக"
பாவனை செய்து. குடும்பத்தையும், குடும்ப பாவனையையும்,
அச்சரீரங்களையும் அவரவர் வினைப்படி, தோற்றுவித்த
"மாயா" என்ற "விதி" தேவனே கவனிக்கிறான்,
என்ற திடபாவனை மேவி, "யத்பாவம் தத் பவதி" என்ற,
நியதியில் நாம் அதுவே! அதுவே நாம்! என்ற பிரம்மான்ம
பாவனையோடு இருப்பது, "திட" வைராக்கியமாகும்!

(5) பேரிடி விழுந்தாலும், உடலே சிதைந்து போனாலும்,
"நாமரூப உலகமே" நிர்மூலமானாலும்,
சற்றும், கலக்க பயம் இல்லாமல் யாம் விநாசன்!
(அழிவில்லாதவன்) யாம் அநாமயன் (நோயற்றவன்)
யாம் நிர்தொந்தன் (பந்த பாசமற்றவன்) யாம் நிர்விகாரி
(விகாரம் விவகாரமற்றவன்) யாம் நிர்பேதன் (பேதமற்றவன்)
"யாம் பரிபூரணன்!" ஆகையால், எமக்கு
ஜரா ஜனன மரணம் ஏது? புண்ணிய பாபம் ஏது? மோக்ஷ
நரகம் ஏது? இந்த "நாமரூப ஜகத் ஜீவர்கள்" அனைத்தும், எம்முள்ளேயே தோன்றி, எம்முள்ளே
யே விளையாடி, எம்முள்ளேயே லயமாகிவிடுகிறது என்ற,
திடபாவனையில், நிச்சலமாயிருப்பது "விசார"
வைராக்கியம் ஆகும்! (அசைவற்றிருப்பது)



உ

இப்படியாக, இன்னும் “ஞான” வைராக்கியங்கள், அனேகம் இருக்கின்றன! உங்களுக்கு இது போதும்.

ஆகவே “ஸத்குரு நாதர்”! அருளும், அவர் வாக்கிலிருந்து உங்கள் “மனோநிலைக்கு” தக்கபடியும், “வினை”களுக்கு தக்கபடியும், “அவரவர்” ஏற்றுக் கொள்ளவும்!

இவைகளை ஏற்றுக் கொள்வதற்கு :- ஆத்ம ஞானம் என்ற பிறவா நிலையாகிய, ஜீவன் முக்தியை, உள்ளத் துடிப்புடனும், ஞான வேட்கையுடனும், விரும்பிய ஓர் பக்குவமானவன்! “ஏக்கமும் மன உருக்கமும்” கொண்டு, அவனுடைய ஸத்குருவாக்கிலிருந்து வரும், ஏதேனும் ஓர், “ஸத்ய குணமுள்ள” தெய்வத்தை தேவதைகளை அல்லது ஏற்க முடியும்! தன்மனோநிலைக்கு ஏற்றபடி, தாமே ஏற்றுக் கொள்ள வேண்டும்! அதன் காரணம் :- அவனுடைய பூர்வ புண்ணியமும், இந்த ஜன்ம பலனும் இணைந்து, பரகருணையாகிய ஸத்குரு கிருபையால், ஒன்று தாமே ஸ்புரிக்கும்! அதை அவன், தாமே ஏற்றுக் கொள்ள வேண்டும்! ஏற்றே ஆகவேண்டும்!



உ

உபாசனை என்றால், உன்னையும் தெய்வத்தை இணைத்து பிணைத்து, ஒன்றுக்குவதாகும்,
அத்தெய்வத்தை, "ஆராதனையால்"
உபாசிக்க வேண்டாம்!
அத்தெய்வத்தை "அன்பால்"
உபாசிக்க வேண்டும்!

ஆராதனைக்கும், அன்பிற்கும், வித்தியாசம், என்னவென்றால்? ஆராதனை:- அஷ்டோத்ரம், சகஸ்ரநாமம் லக்ஷார்ச்சனையால், மந்திர வழிபாடு, அபிஷேகம், ஆராதனை, நிவேதனம், ஆரத்தி, புஷ்பாலங்காரத்துடன், "சோடச உபசார பூஜை" கூடிய ஆகும்!

அன்பால்:- ஸ்ரீபகவன் நாமாவை, சொல்லும் உள்ளமான "கதறி உருகி அழும் கண்ணீர் பெருக்கமும்", "உள்ள உருக்கமும்", இணைந்து, உன் உள்ளத்தை, கழுவி தூய்மையாக்க வேண்டும். உன் உள்ளத்தை, வேறு எதாலும், தூய்மையாக்க முடியாது. கண்ணீரால் கழுவினால்தான், உள்ளம் தூய்மையாகும். அப்படி தூய்மையான, உள்ளத்திலேதான், ஸ்ரீபகவான், தம் கோயிலாக (வீடாக) கொள்வான். ஆகவே "உன்" உள்ளமே, ஸ்ரீபகவானின் "ஆலயம்!" ஆகும்!
"உன்" கண்ணீரே, ஸ்ரீபகவானுக்கு "காணிக்கை" ஆகும்!

மற்றும் அனைத்தும், ஸ்ரீபகவானுடைமையே! ஸ்ரீபகவான் பொருளையே, ஸ்ரீபகவானுக்கு கொடுக்க உனக்கு அருகதை இல்லை! அவனிடம் இல்லாதது, உன் உள்ளமும், உன் கண்ணீரும் ஆகும்!!



உ

அப்படி கதறி, உருகி அழும் பக்தியில்
தான், ஸ்ரீ பகவான் உன் வசமாவான்.
அப்படி கதறி உருகி அழும் பக்தியால்
"பெரிய நெருப்பில்" அதாவது
ஞானாக்கினியில் விழும், இத்தளைகளை,
(அறியாமையின், சொந்த, பந்த, பாச பசைகள் எல்லாம்)
தீய்ந்து, கருகி, சாம்பல் ஆகும்! இதனால், புண்ணியங்கள்
மேலிட்டு, அவை "தர்மமாக" மாறும்! இந்த
தர்ம பலத்தினால், சம்சாரம் என்ற (குடும்ப பாரம்)
ஓர் சுமையாக தோன்றாது. காரணம், உன் மன உருக்க
த்தினால், உன் வசம் அகப்பட்ட, ஸ்ரீ பகவானின் கருணை
யானது, அவன் "மாயாவாக" இருந்து கொண்டு,
(நீ) உன்னை அறியாமலேயே, உன் வினைகளை, நடத்தி முடிப்
பதால், தாவ சிரமமும், அதனால் விளைந்த மனோ சிரமமும்
வரவர, குறைந்து குறைந்து குறைந்து மறைந்துவிடும்.
"கர்மாவின்" பிடிப்புகள், இயல்பாகவே,
குறையும். அதாவது, நல்வினை தீவினை என்ற கர்மாக்களின்
"சுவை அனுபவம்" உன் உள்ளத்தை,
தாக்காது. கனவின் காட்சியென, தோன்றி தோன்றி
மறையும். பின் உன் அனுபவத்தினால், தோன்றாமலேயே,
நின்று விடும். அதனால் குடும்பமோ, தொழிலோ,
சொந்த, பந்த, பாச உறவுகளோ, "விளையாடல்"
நடைபெற்றாலும், ஓர் படக்காட்சி போன்று, உன் உள்ளத்
தை, பாதிக்காவண்ணம், நடைபெற்று முடிந்து விடும்!



உ

"ஓர் ஸாதகனுக்கு, முக்கியமாக, "ஸ்ரீ ஸத்குரு மீதும்"! "இஷ்டமூர்த்தியாகிய, ஸ்ரீ பகவான் மீதும்"! ஸ்ரீ ஸத்குரு அருளும், அனுபவ "ஞானபாட" சிரத்தையான, "சிரவண ரீந்தத்தின் மீதும்"! பூரண நம்பிக்கையும்; திட வைராக்கியமும் வேண்டும்!

(1) ஸ்ரீ ஸத்குருதேவன் நம்பிக்கையானது "பூரண பிரம்மஞானத்தை" கொடுக்கும்!

(2) இஷ்டமூர்த்தியாகிய, ஸ்ரீ பகவான் மீது, வைக்கும் நம்பிக்கையானது "ஆகாம்ய" வினையை சிதற அடித்து; "பிராப்தத்தை" சுவை அனுபவம், தோற்றமல் முடித்து விடும்!

(3) ஸத்குருவாக்கிய சிரத்தை யென்ற, சிரவணமானது பழைய "சஞ்சித" மொத்த மூட்டைகளை, சாம்பலாக்கி, பழைய வினைக் கணக்குகளை "மட்டும்" முடித்துக் கொண்டு போகும், ஓர் "உடல் யாத்திரை"யாக! பண்ணி, புதிய வினை, தொடராவண்ணம், பாதுகாக்கும்!



# "ஸத்குரு சேவை"!

ஸத்குரு சேவை யென்பது, இரண்டு ஆகும்!

1. ஸத்குரு தாவ சேவை!

2. ஸத்குரு வாக்கியார்த்த சிரத்தா சேவை!

1. ஸத்குரு தாவ சேவையென்பது, "அணுக்கத் தொண்டன்" ஒருவனுக்கே, உரியது என்று, முன் மூன்று யுகங்களிலும் கருதப்பட்டு நடந்து வந்தது. ஆனால் இக்கலியுகத்தில் அவரை, "நம்பும் அன்பர்கள்" அனைவரும் பயன் பெறும் நிலைக்காத, ஏதேனும் ஓர் சிறியபொருள் (உள்முகமாகவோ! வெளிமுகமாகவோ!) அவர் ஏற்றுக் கொண்டாலும், அது அவர் தாவசேவையே ஆகும். (ஒன்றே ஆக வேண்டும்) ஆனால் அது, எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், இருக்க வேண்டும்!

2. இக்கலியுகத்தில்மட்டும், தாவ சேவையை விட, வாக்கியார்த்த சிரத்தா சேவையே, முதன்மையாக கருதபடுகிறது. காரணம் :- கலி தோஷம் நிறைந்த, கோர காலமாக இருப்பதால், மனம் சாக வேண்டும்! அதாவது மனம் மறைக்காத வேண்டும்! அதற்கு, வாக்கிய சிரத்தையே! முக்கியமாக, கருதப்படுகிறது. மேலே கூறிய இரண்டும் கிடைப்பது அரிதிலும் அரிதாகும். இன்று உங்களின் நம்பிக்கையே! மூலதனமாக அமைகிறது! அவர்யும் கிடைக்கும்!!



உ

இதற்கு முன் கூறியுள்ளபடி, சிரத்தையுடன் நடந்து கொண்டு, உங்கள் ஸ்வய "அனுபவத்திலே!" குடும்பம், தொழில் எம்முடையதும் அல்ல! அது யாமும் அல்ல! என்றதிட உணர்வோடு இருந்து கொண்டு "நான்", "எனது" முழுமையாக நாசம் செய்து, இனம், மதம், மொழி, அனைத்து பேதங்களும் இறந்து, சுத்தா சுத்தத்தையும் குறியாமல், "போக்கு", "வரவு", "இழப்பு"! பொருள் உறவு நட்பு, இவைகளின், வீணான மன கற்பனைகள் நாசம் செய்து. பார்ப்பதிலும், கேட்பதிலும், அது பற்றி பேசுவதிலும், சர்வ ஜாக்ரதையாக இருந்து, சரீர இன்பதுன்பம், இயல்பாகவே விதிப்படி நடைபெறுகிறதென, தெளிந்து. தேகமோ, உடைமைகளோ, உறவு நட்பு வகைகளோ, பொன்பொருளோ, "நாம்" அல்ல! "நம்முடையதும்" அல்ல!

ஆகவே எமக்கு, பந்த மோக்ஷ நரகம் இவைகள், முக்காலங்களிலும், இல்லவே இல்லை! மரணமில்லா எமக்கு, ஜனனமேது? ஜனனமில்லா எமக்கு, மரணமேது? நாமரூபமில்லா எமக்கு, விகார விவகாரமேது? மரணமில்லா எமக்கு, பயமேது? ஊர்நாட்டு இடம் இல்லா எமக்கு, கால தேச வர்த்தமானமேது? முக்காலமும் ஓரியல்பாக இருக்கும், எமக்கு இந்திரஜாலம் போல், இருக்கும் இப்பிரபஞ்சம் ஏது? யாமே ஜீவாத்மா! யாமே ஆத்மா! யாமே பரமாத்மா? யாமே பரம்பொருள் என, உங்கள், "நிதித்யாசத்தால் தெளிக"

எல்லாம் ஒன்றே! அது சுத்த சிவமே! அது யாமே! அது நீங்களே! இது ஸத்தியம்!

பாபா.



"நாமரூப குணம் குறி" என்றால்? அனைத்தும் மண்ணே. இயற்கையாகிய, மண்ணிற்கு, மனமே கற்பனை எண்ணத்தினால், ஓர் உருவம் (ரூபம்) உண்டுபண்ணி, அதை இன்ப துன்பமாக அனுபவிக்கும் அனுபவ நிலைக்கு ஓர் பெயரும் (நாமம்) கொடுத்து, இதை, இப்படி இப்படியெல்லாம், அனுபவிக்க வேண்டும்; இப்படி சுவைக்க வேண்டும் என்ற, கற்பனையினால், அதன் "இயக்கத்திற்கு (அனுபவ சுவைக்கு) "குணமும்" கொடுத்து, அக்குணமானது, இந்த மனிதனின், அஹங்கார, அபிமான எண்ணங்களான, காமம், க்ரோதம், லோபம், மதம், மோஹம், சந்தேகம் என்ற, ஆறு வக்ர குணங்களுடன், பிணைத்து, அதை சிருஷ்டியின், முக்குணங்களான, ஸத்வ, ரஜஸ், தமஸ், என்பதில் இணைத்து, இந்த மனம் படைத்த மனிதனே, நாம் என்ன "குறிக்கோளுடன்" பிறந்திருக்கிறோம் என்ற, லட்சியத்தை, மறக்கடித்து, "ஜகவாழ்வே" நம்முடைய, "குறி" (க்கோள்) என, நம்மை திசை மாற்றி, அலைய வைத்ததே, இந்த நாம ரூப குணம் குறி ஆகும், என ஸ்ரீமஹான்களின் அனுபவம் இருக்கிறது.

உ



# "புனிதமான பிறவி"

என ஓர் இடத்தில் குறிப்பிட்டோம். அதன் விபரத்தை கீழே காண்க!

(1) உயர்பிறவி வேறு! புனிதமான பிறவி வேறு!

உயர்பிறவி யென்றால்; "பொன் பொருள் போகத்திலும்", பெண் "இன்ப மோகத்திலும்"! அதனால் உண்டாகும் "ரோகத்தில்" (வியாதியில்) ஆழ்ந்து, இன்ப துன்பம் என்னும் "விஷ (விஷம்) யானந்தத்தில்" மூழ்கி, கீழ்மேல் பிறவிகளில், திரும்ப திரும்ப, சுழலுதல் ஆகும்!

(2) புனிதமான பிறவி யென்றால்:- ஸ்ரீ பகவத் சொரூபத்தில் ஒன்றி, ஆடிப்பாடிக் கொண்டாடி பதமுக்தி யெனப் படும், கைலயம், வைகுண்டம், பிரம்மலோகம், மணிக்ரீவம், என்ற தேவ தெய்வ "கற்பக" உலகங்களில், நம் புண்ணியம் தீரும் மட்டும், பேரின்பத்தை அனுபவித்து மீண்டும், ஜனன மரணத்திற்கு வந்தே ஆகவேண்டும். இது "பேரானந்தம்" எனச் சொல்லும், பெயரளவில் (நாமாவில்) பெரும் ஆனந்தம் ஆகும்! மனோசயவத்தால், சந்தரு தவறினாலும், ஈனமான பிறவி, பெறவும் வாய்ப்பு உண்டென ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள்.

உ



கேள்வி:— ஆத்மானந்தம் பெறுவது எப்படி?

பதில்:— உடல் உலகம் பொய் என்றும், ஆத்மாவாகிய நாம், ஸத்தியமென்றும், மனோ சஞ்சலம், அற்றிருப்பதே, ஆத்மானந்தம் ஆகும்!

கேள்வி:— சரீராதி, இன்ப துன்பங்களால், ஆத்மானந்தம், தடைபடுகிறதே!

பதில்:— சரீரம் என்றாலே, "ப்ராரப்தம்" எனப் பொருள்படும். ஆகவே புண்ணிய பாப சம்பந்தம் கொண்ட, உடலுக்கு, இன்பமும் துன்பமும், வந்தே தீரும்! அவைகளை "காணும்" காணாமல், "கேட்கும்" கேளாமல், இவை அனைத்தும், இவ்வுடல் சம்பந்த, புண்ணிய பாபமானது, யதேச்சையாகவே, "எவர்" முயற்சியும் இல்லாமல், திட்டமிட்டபடி நடைபெறுகிறது என்றும், இது மாயா ஆகிய, ஸ்ரீ பகவானின் கருணையே என்றும், அவன் நாமாவில் "மனதை" ஒன்றச் செய்தும், அதுவே நாம் என்ற "உணர்வில்" அறிவை, ஒடுங்கச் செய்தும், சரீர இயக்கங்களைக் கண்டு மனம் விகாரம் அடையாமல், "எல்லாம் நலமே" நடைபெறுகிறது என்று சற்று அடங்கி "பொறுமை" யுடன் காத்திருந்தால், அவஸ்யம் இயக்கம் மாறும். அங்கு தோன்றும், இன்பமும் துன்பமும், மனதைத் தாக்காமல் ஆனந்தம் பெற முடியும்! அந்த ஆனந்தமே, ஆத்மானந்தமாக முடிவுறும். இது இந்த ஏழையின் ஸ்வய அனுபவம்!



கேள்வி:- உ

குடும்பமோ, தொழிலோ, நாம் காப்பாற்ற வேண்டும் என்ற, எண்ணமில்லாமல், எப்படி இந்த, இல்லாத "வாழ்வை" நடத்துவது, என்ற கேள்வி எழுவாம்?

பதில்:- குடும்பமோ, தொழிலோ, எந்த நிகழ்ச்சிகளோ, அனைத்தும் "நடப்பவை காரியமே"! அவை புண்ணிய பாப வினை சம்பந்தம் ஆகும். நீ எண்ணினாலும், எண்ண விட்டாலும், அது நடந்தே தீரும். அங்கு, உன் கர்மாவின் படியே, எண்ணம் வரும்! உன் எண்ணமே, அக் கர்மாவை முடிக்கும்! முடிக்க வேண்டும். இதுவே விதி! இதுவே நியதி!

இங்கு கவி கோடி மணி மையாலும், ஆத்திர அவசர வேகத்திலும், படபடப்பிலும், உன் மனம் "உந்தப்பட்டு"! அக்கர்மாவின் மேல் உள்ள "மோஹ வேகத்தால்"! கர்மா சம்பந்தம் இல்லாத, "தடுமாற்ற" எண்ணம், உண்டாகி விடுகிறது. இதற்கு, நீயும் (இங்கு நீ அவன் நிலையில் அவன் குழந்தையே! நீ அதன் நிலையில் அதுவும் நீயும் ஒன்றே) சம்பந்தம் இல்லை! உன் உபாசனை மூர்த்தியாகிய, ஸ்ரீ பகவானும் சம்பந்தம் இல்லை! உன் "வீண் கற்பனையே"! சம்பந்தமாகும். இங்கு இம்மனதுக்கு தேவை, பொறுமையாகும்!



"பொறுமையும்" "நிதானமும்" இணைந்த இரண்டொரு விழிகள், "இறை குரு" உணர்வுடன் கூடி இருந்தால், அவசியம் அங்கு "பதறாத காரியம் சிதறாது" என்பது, ஸ்வய அனுபவமாகும்! இதனால் சோர்வு, அயர்வு, சந்தேக தயக்க பயம், அனைத்தும் பூரணமாக நீங்கி விடும். இது இந்த ஏழையின், ஸ்வய அனுபவம் ஆகும்!

(1) "காரிய கர்மாக்கள்" எண்ணுவது, உன் "மனதின்" வேலை!

(2) உன் பூர்வ வினையின் படி, அதை முடிப்பது, ஸ்ரீ பகவானின் "மாயா விதியின்" வேலை!!

(3) குடும்பமோ, தொழிலோ வாழ்வின் எந்த நிகழ்ச்சிகளோ, பதற்றம், தயக்கம், பயம், துக்கம், அயர்வு, சோர்வு, இல்லாமல் "நடந்தது நலமே" இது ஸ்ரீ பகவானின் கருணையே! வினையின்படி, ஒழுங்காகவே, நடைபெற்றிருக்கிறதென, வாங்கி சமாதானத்துடன், உன் "நல்வணங்கி" ஏற்பதுவே, விவேகம் ஆகும்.

அங்குதான் நீ ஸ்ரீ பகவானை முழுமையாக நம்புகிறாய் என்பது சத்தியமாகும். அங்கு குற்றம் குறை கண்டால், நீ ஸ்ரீ பகவானை, முழுமையாக நம்ப வில்லை, என்பதே சத்தியம்! ஸ்ரீ பகவானையே, சந்தேகிக்கிறாய், என்பதன் பொருள். நடைபெறும் "காரியபலன் மோசமானது" உன் அமைதியை கெடுக்கும்! தடுமாற்றம் ஏற்பட்டால் நீ ஸ்ரீ பகவானை சந்தேகிக்கிறாய். நலமே என, அமைதி கொண்டால், நலமே பெறுவாய்!



# “நனவு” & “கனவு”!

இவ்விரண்டின், ஓர் சிறிய விளக்கம்!

நனவு :- இது நாமரூப, சம்பந்த, உலகபொருளுக்கும், மனதிற்கும் உள்ள சம்பந்தமாகும். இங்கு, எப்பொருளும் “தூல்” சொரூபம்! உன் உடலும் “தூல”ச்சொருபமாகும்!

இவ்விரண்டின், இயக்கம் நடைபெறுவதோ, “கர்மாவின்” பிணைப்பிறவு “மனதின்” இயக்கமாகும்.

இங்குபொருளும், தூலமும், ஜடமே! அதாவது அறிவற்றதே! இவ்விரண்டின், இயக்கங்களுக்கும், “தூல” சம்பந்தம் இருப்பதால், அவசியம், “வின்” தொடரும்!

“அங்கு, வினை எப்படி, தொடர்கிறது என்றால்? உன் எதிராளியுடன் காரசாரமாக “பேசும்” போதும். இருவரும், ஒருவருக்கொருவர், “நகை”க்கும் போதும். (சண்டையிலும் போதும்)

“நீ”, “அவன்” முகத்தை கவனிக்கிறாய்! அவன் ஒவ்வொரு, அங்க அசைவுகளையும், கவனிக்கிறாய்! அவன் வார்த்தைகளையும், கவனிக்கிறாய்! இவை அனைத்திலும் வரும் “குற்றம் குறைகளையே” கவனிக்கிறாய்.

உன்னை ஒன்று கேட்கிறேன்: அங்கு “நீ உன்னுடைய” அங்க அசைவுகளை, கவனிக்கிறாயா? உன் வார்த்தைகளை, கவனிக்கிறாயா? உன் முகத்தின், கடுகடுப்பை, நீ கவனிக்கிறாயா? இல்லவே இல்லை! உன்னைக் கவனிக்கமுடியாது தான். காரணம் “அவன்” மூலமாக, “நீயே” ஆகும் போது, உன்னை உன்னால் எப்படி கவனிக்க முடியும்?



உன் முற்கவன சக்தியானது, உன்னை பாழ்படுத்துவதால் "ஈர் தற்கவன சக்தி" சிதறடிக்கப்படுகிறது. நீ உன்னை கவனிக்கும் நிலையில், சற்று "ஆழ்ந்து" நோக்கினால், அங்கு, உன் தற்கவன சக்தியினால், உன் எதிராளியின், உருவமும், அதை இயக்கும் மனமும், அவசியமும், அடங்கியேயிருக்கும்! இதுவே "மாயா"வாகிய, ஸ்ரீ பகவானும் "மனம்" ஆகிய, ஜீவனும் போட்டி போட்டு நடத்தும், "உலக" நாடக மேடையாகும்!

ஓர் முக்கியம் என்னவென்றால்? கனவின் நிலையில், நீ நல்ல கனவோ, கெட்ட கனவோ, கண்டு, விழித்து பார்த்ததும், பொய் யென, கூறிவிடுகிறாய்! ஓர்கேள்வி :- நீ கனவு காணும் போது, கனவு காணும் "உன்னை" நீ காண்கிறாயா? என கூர்ந்து, கவனித்தால், உன்னை "நீ காண முடியாது" காரணம், கனவுக் காட்சியில், நீ "மயங்கி" அனுபவிப்பதால், நானே காண்கிறேன் என, எண்ணுகிறாய். ஆனால் கனவு காண்பது "நீ தான்"! ஆனால், அங்கு உனக்கு "ரூபம்" இல்லவே இல்லை! உன் ரூபமாகிய, வாடகையின், தாவம் தான், கீழே பிணமாய் கிடக்கிறதே! அக்கனவை காண்பதோ, உன்னுடைய "மனம்" ஆகும்! அம்மனமானது, மாயாவின் மகளை இருப்பதால், நம் "மூளை மாயாவின் கற்பனையில்" நமக்குத்தானே,



மாயா சிந்திக்காது ஆனால் செயலாக்கும்!
மனம் சிந்திக்கும் செயலும் ஆக்கும்!!

"நாமரூப" ஜீவ ஜட பொருள், உருவங்களை, தோற்றுவித்துக் கொண்டு விளையாடுகிறது. ஆனால் அவ்விளையாட்டு, "கர்ம" சம்பந்த, "தொடர்பு"!

இவ்வாறு தன்மையினால், அது அந்த கணம், "உண்மை" யெனத் தோற்றுகிறது. விழித்த மறு கணம், அது "பொய்" என உணர முடிகிறது.

ஆனால், விழிப்பின் நிலையில், நாமரூப ஜகம் & ஜீவர்கள் & பொருள்கள், அனைத்தும், புண்ணிய பாப, வினை சம்பந்தம் கொண்டு, அது சம்பந்தமாயுள்ள, உன் வினை உடலையும், ஆட்டிப்படைத்து "வினை" களை பிணைக்கிறது உன் மாயா மனம்!

தூக்கமோ, நற்கனவோ, அதன் முடிவில் "அவை எழுவதாகவே" தோற்றும்! இது, இம்மாயா மனதின், "மயக்கபோதை"யே அப்படி, ஆட்டி அலைக்கழிக்கிறது!

முன்பின், கற்பனையின் மனமைய தோற்றம், கனவு ஆகும்! வினை கழியும், நாமரூப ஜக ஜீவ, தோற்றம், நனவு ஆகும்! இவ்விரண்டுமே, "அசத்" ஆகிய (கஷுதை வத்தியாகிய) பொய்யே! கஷுதை வத்தியில் முன்வத்தி! பின் வத்தி! என விசாரணை ஒன்றி இரண்டையும், பொய்யெனத் தள்ளு. "நாமே அந்த ஒன்றே! அந்த ஒன்றே நாம்! என உறுதியை பாவம் தத் பவதி"! என அதுவாகவே நீ இருக்கிறாய். எல்லாம் நலமே! என எண்ணுக! நலமாவாய்! அதுவேயாகு! நீயே அது! இது ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!

பாபா.



# யாம் நாம் யார்?

(1) "யாம்":— இது ஓர்மை! இது பக்தியின் நிலையில், "பரிபக்வான்"! இது "ஸத்வகுண" நிலையில், "சாக்ஷி" நிலை! இது "ஏககுண" வடிவில்; "அன்பு"! "அறிவு"! "பொறுமை"! "பணிவு"! "கருணை"! "ஸாந்தி"! யின் "ஆறு" அம்ஸமும் கொண்டதாகும்!

(2) "நாம்":— இது பன்மை! இது அத்வைத, முதல் அனுபவ "ஞானம்"! இது நிர்க்குண நிலையில், "சர்வசாக்ஷி"! இது பாவரூ நிலையில், "அகண்டபாவனி"! முந்தையது மனம்படைத்த "மனித" இனத்தை மட்டும், குறிக்கும் "சாக்ஷி" பாவனையாகும்! பிந்தையது, மனம் "மஹத்தான" நிலையின், "அறிவு" சொரூபத்தினில்;



உ

"84 லக்ஷம்" ஜீவ கோடிகளுக்கும், (நடப்பன, நீந்துவன, பறப்பன, ஊர்வன, கிருமி, கீடகம், மற்றும், மனித இனத்தையும் இணைத்து) அனைத்திற்கும், "அகண்டாகார விருத்தி" நிலையில், "எல்லாம் ஒன்றே" என்ற நிலையில், முடிந்த முடிவாக உணர்த்தும், "அத்வைத" ஞானமாகும்!

"யாம்" என கூறுவது, "ஸ்ரீபகவான்" நிலை!

"நாம்" என கூறுவது, அநுபவ "ஞானி" நிலை!

ஆனால், "ஜீவநிலையாகிய" "நான்", "என்னை", "என்னுடையது", என மட்டும் தான்!

அத்வைத "ஞானுபவம்" உடையவன், எண்ணவும் மாட்டான்! சொல்லவும் மாட்டான்! செய்யவும் மாட்டான்! இவை மூன்றும் இருக்குமாயின், அது வாய் ஞானமே! அது அநுபவ ஞானம் ஆகாது!



உ

ஓராம் ஸ்வயஞானுனுபவ குழந்தை
களான, "நம்பிக்கையும்"
"வைராக்கியமும்" இணைந்த
எம் செல்வங்களே, "மட்டும்!"
எம்முடன் இணைந்து, கீழே கண்ட, ஸத்திய வாசகங்
களை, கொடுக்கிறோம்!
"உணர்க!" "அனுபவமாகுக!!"
"அதுவே நாம்!" "நாமே அது!!" என
ஆகுக என, ஆசி வழங்கி விட்டோம்!

நாம, ரூப, குணம், குறி, காலம், தேசம்,
வர்த்தமானம், மனம், வாக்கு, காயம், ஆகிய,
இவை பத்தையும், கடந்ததாயும்; சொல்லவொண்
விளக்கவொண்ணா, "நாம்"! ஸ்ரூபாரூபமே!
அளவிடற்கரிய கல்ப கோடி
காலம், உவமானத்திற்காக, "பிரம்மானந்த
சமுத்திரமாகவே" நிஸ்தரங்க
சமுத்திரமாய் (அலையற்ற, சலனமற்ற சமுத்திர
மாய்) அமைதியின், ஆனந்தமாகவே இருந்தோம்.
ஓர் விளையாட்டின் நிமித்தமாக, "ஓர்"



"தோற்றத்தை" எமக்கு
யாமே, ஏற்படுத்திக் கொண்டோம்!
அதை, சர்வ சதா "சிவ" சொருபமா
கவே, இருக்கும் நிமித்தம், அந்நிலையில்
பின்பு வந்த, ஸ்ரீமஹான்கள், அந்த பர சொருபத்திற்கு,
"சதா சிவம்" என நாமம் சூட்டிக் கொண்டார்கள்!
ஒன்றுமட்டும் இருந்தால், விளையாட முடியாது, என்ற
நிலையில், எம்மில் இருந்து, "மற்றொன்றை"
பிரித்தோம். அச்சொருபத்திற்கு, "மகேஸ்வரன்" என நாமகரணம், சூட்டினார்கள்!
இப்போது, அந்த ஸ்ரீமஹான்கள், எங்கிருந்து, எப்படி,
வந்தார்கள் என, கேள்வி எழுவாம்.
விளையாட்டு என வந்து விட்டால், இருவர் இருந்தால்,
மட்டும் போதாது. "விளையாடும்" பொருளும்
வேண்டும்! எம்முடன் விளையாடும், "சிறுவரும்"
வேண்டும்! ஆகவே?
"விளையாடும் பொருள்":- கோடானுகோடி
எண்ணில் அடங்கா, அண்டரண்ட கோள்களும்,
"மண் மலை கடல் நதி மரம் செடி கொடி" என
"பகுமைகள்"
உண்டு பண்ணினோம்!
"விளையாடும் சிறுவர்":- பக்குவ ஆன்மாக்களும் ஸ்ரீமஹாத்மாக்கள் ஆவர்!



"ஸ்ரீமஹாத்மாக்களும் யாமே" ஆமாம்! "ஜகத்தின் நியமித்தமும், ஸ்ரீமஹாத்மாக்கள் நிமித்தமும், விளையாட்டிற்காக முதலில் "யோகமாயா" என்றும்; பின் "யோகமாயாளென்றும்", எம் "சாயலையே" (நிழலையே) பயன்படுத்திக் கொண்டோம். எம் விளையாட்டு விரிவடையும் பொருட்டு, முதலில் மனித இனத்தையும், மற்றும் அனைத்து, ஜீவ கோடிகளையும், "யாமே எம் தேஹத்தை" உண்டுபண்ணி அவ்வனைத்து தோற்றங்களிலும், "அந்தர்யாமித்துவமாக" யாமே, பூரணமாக இருந்து கொண்டு. தெய்வ நிலையில் "அறிவாகவும்", ஜீவ நிலையில், "மனமாகவும்". செயல்படுத்தி, விளையாடிக் கொண்டிருக்கிறோம்! யோகமாயாவில், தோன்றியதை, "அறிவாகவும்" யோகமாயாவில் தோன்றியதை, "மனமாகவும்" ஸ்ரீமஹாத்மாக்களாகிய, யாமே வகுத்துக் கொண்டோம்!



அறிவு "ஸத்வ" குணமென்றும்,
மனம் "ரஜஸ்,தமஸ்" என்றும்
ஸ்ரீ மஹாத்மாக்களாக இருக்கும்
யாமே பிரித்து கொண்டோம்!
"கிருதா / திரேதா / துவாபர்
யுகபாதி வரையிலும், ஸத்வம் ஒன்றே,
நிறைவாக இருக்க, வகை செய்து கொண்டோம்!
பின் துவாபர யுக கடைசி! "கலி" யுகம் முழு
மையும், ரஜோ குணமும், தமோ குணமும், இணைந்து,
பின் கலிபுருஷனாகயாமே
இருந்து கொண்டு "தச (பத்து) விதவக
ர குணங்களையும் யாமே!
ஏற்றுக் கொண்டு (உப்பு, உறைப்பு, புளிப்பு,)
"காரசாரமாக" விளையாடிக் கொண்
டிருந்தோம். இக்காரசார விளையாட்டு, என்
தேவை யென்றால், "விஷ" பெருக்கமும்!
"மண" இருக்கமும் (கடினமனம்) அதனால்
"ஜனனமரண" சுழற்சியும்!
வேகப்படுத்துவதற்காகவே யாமே உண்டு பண்ணினோம்!



"தோற்றத்திற்கு" "அயன்" ஆகவும்! "இருப்புக்கு ஹரி" ஆகவும்! "மாற்றம் மறைவுக்கு ஹரன்" ஆகவும்! "ஜீவ" அசைவுக்கு, "மனமாகவும்!"

யாமே இருந்து விளையாடுகிறோம். யாம் தெய்வ நிலையில், சாட்சியாகவும், யாம் ஞான நிலையில், சர்வ சாட்சியாகவும், இருந்து கொண்டு இந்த "நாமரூப ஜகத் ஜீவர்களை ஆனந்தமாக" கண்டு களிக்கிறோம்!

ஒ நாம ரூப ஜகத் ஜீவர்களை "மனதை" வைத்து "ஆட்டிக்" களிக்கின்றோம்!

ஒ நாம ரூப ஜகத் ஜீவர்களை, "நினைப்பை" வைத்து "ஆடிக்கழிக்கின்றோம்!"

மனம், புத்தி, சித்தம், அஹங்காரம், அனைத்தும் "எம் அம்சங்களே"! மற்றும், ஜகத் ஜீவ சரீர தோற்றம் அனைத்தும், "எம் அம்சமே"! ஆதல் "நாமரூபம்" அனைத்தும் "மனோமயமாகிய யாமே! (பரமே)" ஆதல்



உ

"நாமரூபம்" அனைத்தும், "கற்பனையமான" "எம் மன எழுச்சியே".
அம் மனம் எம், "அறிவோடு" வயமானதால், மன எழுச்சி இல்லாமல், "அறிவு எம்மோடு", கலந்து மயமாகி விட்டது!
முன் கூறிய, "ஈஸ்வராதிகள்"! எம் விளையாட்டின் நிமித்தம், எம் அம்சமாகவே வந்தவர்களே! அமுதவது உப்பு சமுத்திரமாகிய, எம் முன் இருந்து, தோன்றிய, "எம் பொம்மைகளே"!
"நாமரூபம்" அனைத்தும் "எம்மையே" கற்பனையே! "எம் விளையாட்டின்" நிமித்தம் எம்முடைய ஏற்பாடாகும். அதே போல் "எம் விளையாட்டின்" நிமித்தமே, "அயன்" "ஹரி" "ஹரன்" என வடிவெடுத்து நாமரூப "தோற்றம்", "இருப்பு", "மாற்றம்", "மறைவு" என, எம் "மாயாபாஸ்" ஓர் "மாயா ஜாலத்தை" உண்டு பண்ணி, ஓர் காலத்திற்கு, உட்பட்டதைப் போல் பாவனை செய்து, இது காலபரியந்தம் விளையாடினோம்.



"விளையாட்டு" போதும் என,
"யாமே" நிறைவு கொண்டோம்.
ஓர் சிவந்தி பூச்சியானது தன்னில்
தோன்றிய, ஓர் "பசை" போன்ற
நூலால், தமக்கென, ஓர் கூடு கட்டி, விளையாடி,
பின் அதுவே, "போதும்" என நிறைவு பெற்று,
தம் பசையை, தாமே உறிஞ்சு, எடுத்துக் கொண்டு,
சும்மா சுகமாக, இருப்பது போல், யாமும் எம்முள்
இருந்து, எம்மால் தோற்றுவிக்கப்பட்ட "மாயா
வாழும்: "எம் மாயாவில் தோன்றிய "மன
தாலும்" ஜகத், ஜீவ, "கர்த்தாக்
களாக நாமரூபம்"
தரித்து, ஸ்ரீ மஹாத்மாக்களாக யாமே தோன்றி,
"மாயா" நிலையில் "ஈஸ்வரா" களாகவும்,
அனைத்து (மனித இனத்தையும் சேர்த்து) "ஜீவ
கோடிகளாகவும்" தோன்றி, "எம்
மாயா மனதால்" விளையாடி, அனைத்
தையும் முடித்துக் கொண்டு. அனைத்தையும்
"எம்முள் மறையச் செய்து"
எம்மையும் (இல்லாமல் செய்து, அதாவது
தோற்றம் இல்லாமல் செய்து, இப்போது ஆனந்தமாக இருக்கிறோம்.



உ

ஓம் ஆத்மானந்த குழந்தைகளே!

"எமக்கு" அன்னியமாய் "நீங்கள்" இல்லை! "உங்களுக்கு" அன்னியமாய் "யாம்"!

இல்லவே இல்லை! நீங்கள் கேட்கலாம்? எல்லாம் நாமே! எல்லாம் நன்மையே! எல்லாம் விளையாட்டே! என எழுதி விட்டீர்கள்! நாங்களும் படித்து விட்டோம்! படிக்கும் போது ஒரே ஆனந்தமாகத்தான் இருக்கிறது! "ஆனாலும்?"

விபரீத யுக்தியும் சந்தேகத்தால் வரும், கலக்க பயமும், எங்களுக்கு நீங்கவில்லையே? இவைகள் எல்லாம் நீங்கி "உங்கள் அனுபவ" நிலையில், நாங்களும், அந்த பிரம்மானந்தமாகவே, நிலைத்து அதிலேயே, கலந்து கரைந்து மயமாகும் நாள் "எந்த நாளோ??????" எனக் கேட்பதை, யாம் உணர்கிறோம்!

ஓம் செல்வங்களே! "ஆனந்த" சொரூபமே "நீங்களாகவே" இருக்கும் போது, வேறு ஆனந்தத்தை, வேறு எங்கே, தேடுகிறீர்கள்??????

"நான்" (என்றால், அதிகாரம், ஆதிக்கம், அஹங்காரம்)

"எனது" (உடைமை, உரிமை, மானம், சூடு, சுரணை, வசை)

10



நான் எனது என்ற இரண்டையும்
விட்டால் போதும். அவைகளால்
"பிணைக்கப்பட்ட பந்தம்"
வெய்யிலின் மஞ்சள் என மறைந்துவிடும்!
இதுவே இந்த "ஏழையின் ஸ்வய
அநுபவம்" ஆகும்!

(1) "அது" செயலற்ற ஒன்று. "நாமரூப ஜகத்
ஜீவர்கள்" அதனிடம் இல்லை!

(2) "அவன்" (ஸ்ரீபகவான்) செயலுற்றவன்!
மேலே கூறிய, நாம ரூப, ஜகத் ஜீவர்கள், அவன்
"மாயா" சிருஷ்டியே! அவன் வகையில் உண்டு!

(3) "ஜீவன்" ஸ்ரீபகவானின், மாயாமனம் வசம்,
"அகப்பட்ட" தன்மையால், "நாமே"
ஸ்ரீபகவான் என்பதையும், "நாமே" ஆத்மாவாகிய
"அது" என்பதையும் தம் "கவனக்குறை
வால்" மறந்துவிட்டான்!

(4) "ஸ்ரீ ஸத்குரு! அதுவானவர்!"
ஸ்ரீபகவானிலும், அதீதமானவர். அவரிடமும்,
அவனிடமும், "மனம்" இல்லை. ஆனாலும்,
ஸ்ரீபகவானின் கருணையினாலும், அப்பக்குவ ஆன்மாவின்,
நம்பிக்கை, வைராக்கியத்தினாலும், அவனை,



"கடைத்தேற" முடியும்!

அந்த ஜீவனானவன், ஸ்ரீபகவான் கருணையினாலும், ஸ்ரீ ஸத்குரு கிருபையினாலும், "உண்மை"யின், "உணர்வு" பெற்று, ஓர் பக்குவ ஆன்மா ஆன தன்மையினால், அவன் செய்த "சாதனை" யாவது?

(1) "நாமரூப, ஜகத்தையும்" அவன் "உடல், உடைமை, உறவு" நட்பு, அவைகளை எல்லாம் நீயே! எல்லாம் உன்னுடையவ்! எல்லாம் உனதே! என்று "சர்வார்ப்பணம்!" ஸ்ரீபகவானிடம், முழுமையாக, செய்து விட்ட தன்மையினால், அவன் "வினை" நாசம் ஆனது!

(2) ஸத்குருதேவனின், ஸத்திய வாக்குப்படி, நாமரூப, ஜகத் ஜீவர்களும், அவைகளின், இயக்ககர்த்தாக்களான, "ஈஸ்வராதிகளும்" நாமரூப, "அவரனைய மயக்க மனமே மயபிராந்தியே!" என நிர்மூலமாகி விட்ட ஓர்மையின் உணர்வாக, "அதுவே நாம் நாமே அது!" என்ற ஸ்வய ஞான, அனுபவத் திறனால், "மனம்" நாசமானது!



"லீலையும்", மாயம்!

இணைந்ததே, நாம ரூப, ஜகத் ஜீவ, ஈஸ்வராதிகளாகும். இவை அனைத்தும் "மறைய கற்பனையே" என உணர்ந்து, அவை "மெய் அறிவினில்" "மறந்து! மறைந்து! இறந்து!" போன தன்மையினில் "உணர்ந்திய"! "சத்குருவும்", "உணர்ந்த"! "சத்சீடனும்" ஒன்றாகி கலந்து, கரைந்து, மயமாகி விட்டார்கள். அங்கு சென்று விடிவரை தோற்றிய கணவன் மனைவி குழந்தைகள் எங்கே? யாமே ஆனோம்! குடும்பம் தொழில் உறவு, சுற்றம், நட்பு, எங்கே? யாமே ஆனோம்! பொன், பெண், பொருள், மோகம், போகம் எங்கே? யாமே ஆனோம்! தீர்த்தம் மூர்த்தி ஸ்தலம், உபாசனை மூர்த்தி எங்கே? யாமே ஆனோம்! ஆச்சாரம், மடி, அனுஷ்டானம், ஆசார, புனஸ்காரம், அர்ச்சனை கோடானு கோடி மந்திரங்கள், அபிஷேக, ஆராதனை, ஆரத்தி எங்கே? யாமே ஆனோம்! ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை!! ஒன்றுமில்லை!!! ஆனால்? "ஒன்றானோம்!!! அதுயாமே" என சும்மாவே சுகமாக இருக்கிறோம்! அதை சொல்வாரும் விளக்குவாரும் இல்லை. யாம் யாமாகவே இருக்கும் போது எம்மை இன்னதென, எது விளக்க முடியும்? சுயம்! சுயம்!! சுயம்!!!

பாபா.



"**பதிபந்தங்களை**" நீக்கி, "**அபரோக்ஷ ஞானம்**" நல்கும் என, ஸ்ரீ ஸ்வய ஞான அநுபவ நூலில், ஓர் வாசகம் வருகிறது. இது பற்றி ஓர் இடத்தில் "**குடும்பி**" (ஸம்ஸாரி) கருத்தான, விளக்கம் கொடுத்திருக்கிறோம். **ஆஸை?** அதை, "**முமுக்ஷுத்வம்**" முழுமையாக பெற்ற, ஓர் ஸத்தான, ஸத்தியமான, "**குழந்தை**" ஓர் விளக்கம், கேட்டு பெற்று கொண்டது. அதாவது? "**சிவஞானபோதம்**" என்ற "**சைவ** சித்தாந்த நூலில், ஓர் வாசகம் உண்டு.

"**பசு பதீஸ்வரன்**" என ஸ்ரீ பகவானுக்கு ஓர் நாமம் உண்டு. இதன் உட்கருத்து:- "**பதி**" ஆவர், "**பாசத்தால்**" நான், "**பசு**" ஆனேன் என்பது ஸத்தியமாகும். பதி என்றால் ஸ்ரீ பகவான். பாசம் என்றால், நாம ரூப ஜகத் ஜீவ சொரூபம். பசு என்றால் அந்த நாம ரூப ஜகத் ஜீவ சொரூபங்களில் "**நான், எனது**" எனப் புகுந்த நான் (பசு என்ற) **ஜீவன்** ஆனேன் என்பதே பொருள்.

பசுவும், பதியும், ஒன்றும் இணைந்ததே பசுபதீஸ்வரன் என கொள்க.



இது “வேதவேதாந்த” கருத்து ஆகும். இதிலிருந்து நாம் என்ன உணர்கிறோம் என்றால்?

“ஈசன்” (பதி) என்ற “ஸ்ரீபகவான்” வேறு! “ஜீவன்” (பசு) என்ற “பாமரன்” வேறு இல்லை! “யாம்” முன்பு கூறிய படி “எம்” விளையாட்டின் நிமித்தமே “யாமே” “ஜகத்ஜீவ நாமரூபம்”! அனைத்தும் ஆனோம்! யாமே, சொந்த பந்த பாசம், உள்ளதைப்போல் ஓர் “மாயா மனை” திரையிட்டு மூடிக்கொண்டு “நான்.எனது” என விளையாடினோம். அவ் விளையாட்டு போதும், என நிறைவு கொண்டோம்.

“நான்.எனைத” விட்டோம். ஜீவன் என்ற திரை விலகி நாசம் ஆனது. அதனை யாமும் “பசு” (ஜீவன்) என்ற திரை விலகி இப்போது “பதி” (ஸ்ரீபகவன்) என ஆகிக் கொண்டோம். அந்த ஸ்ரீபகவான் என்ற மாயாவையும் நாசம் செய்தோம். இப்போது “பரம்” என்ற “பரம்பரமாகவே” இருக்கிறோம். ஆகவே அகம் பிரம்மம் என்ற, ஆத்ம ஞானமானது பதியந்தம் என்னும், கும்பகர்மத்தையும் நாசம் செய்யும்! பகையே பசுவாகி, வேஷமிட்டு ஆடிய, தோஷத்தையும் நாசம் செய்யும், எனவும் உணர வேண்டும்!

பாபா.




Abode of Love

You Are Everything!